கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ்-ன் புதிய வெளியீடுகள்

வாரண்ட் பாலா எழுதிய

**கடமையைச் செய் பலன் கிடைக்கும்.**

நீங்களே வாதாடலாம்...

- உங்களுக்கு நீதி கிடைக்க பல ஆண்டுகள் இனி காத்திருக்க வேண்டியதே இல்லை.
- வழக்கறிஞர் உதவியின்றி நீங்களே சட்ட சிக்கல்களுக்கு தீர்வு காணலாம்.
- சட்ட விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்தும் நூல்.
- No Law - No Life
  So, Know Law - Know Life.
- சட்டத்தைப் பற்றி அறிவோம். அதன் மூலம் வாழ்க்கையை அறிவோம்.
- படித்து பயன் அடைவோம்.

**உலக அரசியல்**

ஹீலர் பாஸ்கர்

*Audio DVD*

- உலக நாடுகளை ஆதிக்கம் செலுத்தும் 13.
- இந்திய, சீனா, பாக்– எல்லையில் நடப்பது என்ன?
- நீங்கள் ஓட்டு போடுவதற்கு முன்பே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுகிறார்கள். எப்படி தெரியுமா?
- உண்மையில் இந்தியாவிற்கு இன்னும் சுதந்திரமே கிடைக்கவில்லை.
- மூன்றாம் உலகப்போர் வருமா? அதன் பின் விளைவுகள் என்ன?
- அரசியல் கட்சிகளின் உண்மை நிலை என்ன?
- மலேசியா விமானம்–நிகழ்ந்த மர்மம் என்ன?
- இது போல உலகம் அறிந்திராத அதிர்ச்சியளிக்கும் பல உண்மைகள். ஒலித்தகட்டில்.

புத்தகம் மற்றும் டிவிடி பெற விரும்புவோர்... தொடர்புக்கு :

**கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ்**

GIRI IYYA PUBLICATIONS

நெ.69, NSK வீதி, செல்வபுரம், கோயம்புத்தூர் – 641 026.
தமிழ்நாடு, இந்தியா. போன் : + 91 96290 32767

E-mail : giriiyyapublications@gmail.com, Website : www.giriiyyapublications.com

AMAITHIYUM AROKIAMMUM English & Tamil Monthly April 2014, TC.NO.TNBIL 03861/2013

# அமைதியும் ஆரோக்கியமும்

புதுயுகத்தின் வழிகாட்டி

அமைதி – 1 | ஆரோக்கியம் – 9 | ஏப்ரல் : 2014



மாத இதழ் 2014

**எண்ணம் போல் வாழ்க்கை**

# ஆசிரியர் மடல்

வாழ்க வானகம் ! வாழ்க பூலோகம் !! தூயவைகளே துணை !!!

## எல்லாப் புகழும் இறைவனுக்கே !

உலக மக்கள் அனைவருக்கும் வணக்கம்

'அமைதியும் ஆரோக்கியமும்' என்ற இந்த மாத இதழின் ஆசிரியரான நாம் உலக மக்களுக்கு இந்த புத்தகத்தின் வழியாக தெரியப்படுத்த நினைப்பது என்னவென்றால்,

உலக மனிதர்கள் அனைவரின் நோக்கமும் ஆரோக்கியமாக, அன்பாக, தெளிவாக, புத்திசாலித்தனமாக, அமைதியாக, நிம்மதியாக, வளமாக, மகிழ்ச்சியாக, குடும்பம் அமைதியாக, தொழில் சிறப்பாக மற்றும் வசதியாக வாழ வேண்டும் என்பதே.

ஆனால் அதை அடைய சரியான வழி தெரியாமல் தேடி அலைகிறோம். அந்த எளிமையான, சிறந்த, நல்ல மற்றும் அறிவியல் பூர்வமான வழிமுறைகளைக் கண்டறிந்து அனைத்து நாட்டு, மத, இன, ஜாதி மக்களுக்கும் எளிமையாக புரியும் விதத்தில் எடுத்துக் கூறுவதே இந்த மாத இதழின் முழு நோக்கமாகும்.

வாருங்கள் நாம் ஒன்று சேர்ந்து தெளிவு பெறுவோம்.

மகிழ்வித்து மகிழ்வோம் !

புரியவைத்து பூரிப்போம் !!

தெளிவுபடுத்தித் தெளிவோம் !!!

## எண்ணம்போல் வாழ்க்கை

### ஆசிரியரின் வேண்டுகோள் / அறிவிப்பு

1. இந்த புத்தகத்தை நகல் எடுத்து மற்றவர்களுக்கு இலவசமாக கொடுக்க அனுமதிக்கிறோம்.
2. உங்கள் நண்பர்கள், உறவினர்களை இந்த புத்தகத்தின் சந்தாதாரராக இருக்க தெளிவு படுத்துங்கள்.
3. இந்த மாத இதழ் "அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை'' என்ற புத்தகத்தை முழுவதுமாகப் படித்தவர்களுக்கு மட்டுமே முழுமையாகப் புரியும். எனவே படிக்காதவர்கள் உடனே கொரியர் மூலம் அல்லது www.anatomictherapy.org – என்ற எங்கள் இணையதள முகவரி மூலம் படித்து தெளியுங்கள்.
4. நான் எனக்கு இந்த வயதில் இந்த வாழ்க்கையில் கிடைத்த அனுபவத்தை வைத்து தகவல்களை எழுதுகிறேன். (கற்றது கைமண் அளவு) எனவே என்னைவிட அதிக விஷயங்கள் தெரிந்த தூயவர்கள் தயவுசெய்து என்னை தெளிவுபடுத்துங்கள்.
5. இந்த புத்தகத்தின் நோக்கம் உலக மக்களின் அமைதி மற்றும் ஆரோக்கியம். எனவே யார் வேண்டுமானாலும் சமூக சிந்தனை கட்டுரைகள், கவிதைகள், கல்வி மேம்பாடு, மருத்துவம், கலாச்சாரம், சட்டம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட கட்டுரைகள் எழுதி அனுப்பி வைக்கலாம். சிறந்த கட்டுரைகள், புகைப்படம் மற்றும் பெயருடன் பிரசுரிக்கப்படும்.
6. ஆசிரியரிடம் நீங்கள் கேட்க நினைக்கும் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்.


ஆசிரியர் குழு

| | |
|---|---|
| ஆசிரியர் | : E. ரவி |
| துணை ஆசிரியர் | : ஹீலர் பாஸ்கர்<br>நிறுவனர், அனாடமிக் தெரபி ஃபவுண்டேசன் |
| உதவி ஆசிரியர் | : சுகுமார் (மருத்துவர்) பொள்ளாச்சி |
| வடிவமைப்பு | : விஜய், கோவை. |
| நிர்வாக அலுவலர்கள் | : ரா. ஸ்ரீனிவாசன், கோவை.<br>ரா. நந்தகுமார், கோவை.<br>ந. சங்கர், புதுக்கோட்டை. |

அமைதி : 1 ஆரோக்கியம் : 9 விலை : ரூ.30

அமைதியும் ஆரோக்கியமும்

மாத இதழ்

வெளியீடு

கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ்

நெ.69, NSK வீதி, செல்வபுரம், கோயம்புத்தூர் – 641 026.
தமிழ்நாடு, இந்தியா. போன் : + 91 96290 32767

E-mail : giriiyyapublications@gmail.com
Website : www.giriiyyapublications.com



ஹீலர் பாஸ்கர்



# வாரண்ட் பாலா
## நீங்களே வாதாடலாம்...

**ஒரு**வருக்கு சட்டச்சிக்கல் வருகிறதெனில் முதலில் அவர் ஒரு வழக்கறிஞரைச் சென்று சந்திப்பார். அவர் இவருடைய வழக்கைப் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதற்காக வாதாடுவார். இது தான் வழக்கமாக இருந்து வருகிறது. வழக்கு எத்தனை காலம் நடைபெற்றுத் தீர்ப்பு வருகிறதோ அதுவரை வழக்கறிஞர், நீதிமன்றம், வாய்தா போன்றவற்றைச் சந்தித்தே தீரவேண்டும். இது எழுதப்படாத விதி. இன்றைய தேதியில் இந்திய நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் பல ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்றன. தீர்ப்பை எதிர்நோக்கியிருப்போர் பலவற்றையும் இழந்து தவிக்கின்றனர். காலம் கடந்த தீர்ப்பு மறுக்கப்பட்ட தீர்ப்பு என்று சொல்லப்படுவதுண்டு. வழக்குத் தொடுத்தவருக்கு நியாயம் கிடைப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடுகிறது. ஏன் இந்த நிலைமை? நீதித்துறையில் இவ்வாறு வழக்குகள் தேங்குவதற்கு என்ன காரணம்?

இதற்குக் காரணம் என்னவென்றால் சட்டம் என்றால் என்னவென்று வக்கீலுக்கும் தெரியாது, நீதிபதிக்கும் தெரியாது. உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் உண்மை இதுதான். சட்டம் என்றால் என்ன? ஒரு வழக்கில் சட்டம் என்ன சொல்கிறது என்பதைத் தெளிவாக தெரிந்திருந்தால் எந்த வழக்கும் நான்கு நாட்களிலோ அல்லது நாற்பது நாட்களிலோ முடிந்திருக்கும். இப்படி வருடக்கணக்கில் நீண்டுகொண்டே செல்லாது. ஆனால் எந்த வழக்கும் விரைவில் முடியாமல் தொடர்கதையாக தொடர்ந்து சென்று கொண்டே இருக்கிறது. இதற்கு ஒரே காரணம் சட்டத்தைப்பற்றி யாருக்கும் தெரியாதது தான்.

ஆனால் இந்த அவல நிலையிலிருந்து விடுபடுவதற்கு நமக்கு ஒரு வழிகாட்டி கிடைத்திருக்கிறார். அவர் பெயர் பாலா. திருவாரூர் அருகே பேரளம் என்ற ஊரைச் சேர்ந்தவர். நமக்கு ஏற்படும் சட்டச்சிக்கல்களுக்கு நாமே வாதாடி தீர்வு பெறலாம் என்பதை விளக்கமாக கூறுகிறார். இவர் பன்னிரெண்டாம் வகுப்பு வரைப் படித்திருக்கிறார். ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் பொழுது அவருக்குப் பலவிதமான சட்டச்சிக்கல்கள் வந்திருக்கின்றன. அதற்குத் தீர்வு காண்பதற்காக அவர் பல வக்கீல்களைச் சென்று சந்தித்திருக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரும் முன்னுக்கு பின் முரணாக பல விதமாக இவரது பிரச்சினைக்கு வழி கூறி இருக்கிறார்கள். சட்டத்தைப் பயன்படுத்துவதில் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் முடிவாக பாலாவுக்கு ஒரு உண்மை தெரியவருகிறது. சட்டத்தைப் பற்றி முழுமையாக இவர்கள் அறிந்திருந்தால் அனைவரது கருத்தும் ஒன்று போல்தானே இருக்கவேண்டும். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தீர்வைக் கூறுகிறார்கள் என்றால் இவர்களுக்கு சட்டத்தைப் பற்றி ஒன்றும். தெரியவில்லை என்று தானே பொருள். எனவே இனிமேல் வக்கீல்களை நம்பிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை என்று முடிவுக்கு வருகிறார். எனவே தானே இனிமேல் சட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வது என்று முடிவெடுத்து சட்ட நூல்களை வாங்கிப் படித்தும் பல வழக்கறிஞர்களையும், நீதித்துறையில் உள்ளவர்களையும், நீதிபதிகளையும் சந்தித்து கலந்துரையாடி தன்னுடைய சட்ட அறிவை வளர்த்துக் கொண்டிருக்கிறார்.



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com



இது தவிர பல வழக்குகளை ஆய்வு செய்து அனுபவம் பெற்றிருக்கிறார். தன்னுடைய ஆராய்ச்சியின் முடிவில் ஒரு மாபெரும் உண்மை அவருக்குப் புலப்படுகிறது. அது என்னவெனில். பெரும் பாலான வக்கீல்கள் கூலிக்கு மாரடிக்கும் பொய்யர்கள் என்று அறிந்து கொள்கிறார். நீதியைத் தாமதப்படுத்துவதில் இவர்கள் இடைத்தரகர் களாக இருந்து செயல்படுகிறார்கள் எனவே இனிமேல் யாரும் வக்கீலிடம் போக வேண்டாம். தங்களுக்கு ஏற்படும் சட்டச்சிக்கல்களுக்கு தாங்களாகவே தீர்வை கண்டுபிடித்துவிடமுடியும். அவரவரே வாதாடி நீதிமன்றத்தில் விரைவாக தீர்ப்பு பெற்றுவிடலாம் என்பதை ஆணித்தரமாக உலகுக்குச் சொல்லி வருகிறார்.

கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 வரை சட்டத்துறையில் ஆய்வு செய்திருக்கிறார். 2006 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஐந்து புத்தங்கள் எழுதி இருக்கிறார். இந்தியாவின் எந்த ஊரில் வசிக்கும் ஒரு சாதாரண குடிமகன் கூட தன் வழக்கிற்காக தானே எப்படி வாதாட முடியும் என்பதை அந்த நூல்களில் கூறி இருக்கிறார். இந்தப் புத்தகத்தினை தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், காவல்நிலையம், நூலகம் போன்ற இடங்களுக்கு அளித்திருக்கிறார்.

இவர் சொல்லும் கருத்து என்னவென்றால்

No LAW - **No LIFE** எனவே

Know LAW - **Know LIFE**

அதாவது சட்டத்தைப்பற்றி தெரியவில்லை யெனில் வாழ்க்கை தெரியாது. எனவே சட்டத்தைத் தெரிந்து கொண்டு வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நீதிமன்றத்தில் வாதாடச் செல்வது என்பது நம்வீட்டில் உள்ள பெற்றோருடன் பேசுவதைப் போல அவ்வளவு சுலபமானது, தான் எழுதியிருக்கும் ஐந்து நூல்களிலும் எளிமையாக அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகங்கள் வெளியீட்டிற்கு இந்திய சட்ட அமைச்சகமும், அந்நூலினைப் படித்து தாங்களே வாதாடிப் பயன்பெற்ற பொதுமக்களும் அவருக்கு உதவித்தொகை அளித்துள்ளனர்.

இந்த ஐந்து புத்தகங்களையும் படிப்போர் தங்களுடைய சட்டச் சிக்கல்களுக்கு தாங்களே சென்று நீதிமன்றத்தில் வாதாடலாம். ஆனால் ஒன்று தங்கள் தரப்பில் நியாயம் இருக்க வேண்டும். இது மிக முக்கியம். இன்று நம் கண்முன்னே பலரும் வழக்குப் பிரச்சினை களுக்காக அலைந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். விரைவில் வழக்கு முடியாமல் வாய்தா, வாய்தா என்று ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டு போவதால் ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் ஆவதுடன் பொருளிழப்பும் ஏற்படுகிறது. அதுவே அந்த வக்கீலின் பெற்றோர் அல்லது உடன் பிறந்தோர்க்கு ஏதாவது சட்டச்சிக்கல் நேர்கிறது என்றால் நான்கே நாட்களில் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தீர்வுகிடைக்கச் செய்கிறார்கள். ஆனால் நம்மைப்போன்றவர்கள், பாமரர்கள் போன்றோர் இவர்களிடம் சட்ட உதவிக்காகச் சென்றால் ஒரு இளிச்சவாயன் மாட்டிக்கிட்டான் என்று அவர்கள் தலையில் மிளகாய் அரைத்துவிடுகிறார்கள். அவனை பணம் காய்க்கும் மரமாகப் பாவித்து எவ்வளவு அந்த மனிதரிடம் இருந்து பறிக்கமுடியுமோ பறித்து விடுகின்றனர். பணம் என்ற நோக்கம் தான் அங்கு செயல்படுகிறது. இங்கு நமக்குச் சட்டம் தெரியவில்லை என்றுதானே இவர்களிடம் செல்கிறோம். ஆனால் இவர்களுக்கும் சட்டம் தெரியாமல் நம்மைப் பாடாய்ப்படுத்துகிறார்கள். உண்மையில் என் வாழ்விலும் நிறைய சட்டச்சிக்கல்கள் எழுந்த போது நானும் வக்கீல்களைச் சென்று சந்தித்திருக்கிறேன். என் தலையிலும் மிளகாய் அரைக்கப்பட்டது. அந்த



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com



வக்கீல்கள் யாரென்று எனக்கு பெயர் சொல்ல விருப்பமில்லை. வழக்குகளுக்காக நானும் அவர்களால் அலைக்கழிக்கப் பட்டிருக்கிறேன். மிகுந்த மன வேதனை அடைந்திருக்கிறேன்.

பாலா அவர்கள் எழுதிய ஐந்து புத்தகங்களை யாரெல்லாம் வாசிக்கிறார்களோ அவர்கள் தாங்களே தங்களின் சட்டப் பிரச்சனைகளுக்காக வாதாடலாம். அவ்வளவு தெளிவு பெற்றுவிடுவார்கள். இந்த புத்தகத்திற்கு பதிப்புரிமை அவர் பெற்றுக்கொள்ளவில்லை. அதாவது எந்தப் பதிப்பகத்தார் வேண்டுமானாலும் நூலாக அச்சடித்து வெளியிடலாம் என்று கூறி இருக்கிறார். ஆனால் ஒருவேடிக்கை என்னவென்றால் இதுவரை எந்த பதிப்பகத்தாரும் இவரது நூலை அச்சிட்டு வெளியிட முன்வரவில்லை. இந்த இடத்தில் ஒரு முக்கியமான விசயத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். நிறையப் பதிப்பகங்கள் ஊரை ஏமாற்றும் வேலைகளைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. நீங்கள் நினைப்பதுபோல் பதிப்பகம் ஒன்றைத் துவங்குவது ஒன்றும் கடினமான காரியம் இல்லை. யார் வேண்டுமானலும் பதிப்பகம் துவங்கலாம். நீங்களே ஒரு பதிப்பகத்தை துவங்கிவிடலாம் அவ்வளவு சுலபமான ஒன்று. இந்தப் பதிப்பகங்கள் எழுத்தாளர்களிடம் அவர்களின் படைப்புகளை வெளியிட பணமும் பெற்றுக்கொண்டு அதை அச்சடித்து ஊர், உலகம் முழுவதும் விற்பனை செய்து இலாபம் ஈட்டுவார்கள். ஆனால் அந்த எழுத்தாளர்களுக்கு ஒரு சதவிகிதம் இரண்டு சதவிகிதம் என்று இலாபத்திலிருந்து போனால் போகிறதென்று பிச்சைக்காரர்களுக்கு இடுவதுபோல் தருவார்கள். இதைக் கேள்விப்படும் பொழுது எனக்கு மிகவும் சங்கடமாகவும், கவலையாகவும் இருக்கிறது.

பாலா அவர்கள் எழுதிய புத்தகத்தை வெளியிட எந்தப் பதிப்பகமும் துணிச்சலுடன் முன்வரவில்லை. நெஞ்சில் துணிவு இருக்கும். (மஞ்சாசோறு) என்று கூறுவார்களே அப்படி எந்தப் பதிப்பகமும் இல்லை. மேடைகளில் ஏறி எல்லோரும் தாங்கள் இந்த சமுதாயத்திற்கு சேவை செய்வதாகவும், அதுவே தங்களின் வாழ்க்கை இலட்சியம் என்று முழங்குகிறார்கள். ஆனால் இதைப் போல் உங்களுக்கு நீங்களே வைத்தியராகலாம், உங்கள் பிரச்சினைகளுக்கு நீங்களே வாதாடலாம் போன்ற நூல்களை எழுதிப் பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் எண்ணம் இருப்பவர்களுக்கு இந்தப் பதிப்பகத்தார் வாய்ப்பு தருவதில்லை. இதற்கு ஏன் யாரும் முன் வருவதில்லை? என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது.

எல்லோரும் என்ன நினைக்கிறார்கள் என்றால் தங்கள் குடும்பம் பிள்ளைகள், வேலை என்று அவரவர் அவர்களுடைய வேலையைப் பார்த்துக் கொண்டு வழக்கம் போல் சாப்பிட்டு உறங்கினால் கடமை முடிந்தது என்று போய்க் கொண்டிருக்கிறார்கள். வாரண்ட் பாலாவின் நூலை யாருக்கெல்லாம் துணிச்சல் இருக்கிறதோ அவர்கள் இதைப் பிரதி எடுத்தோ அல்லது அச்சிட்டோ அனைவருக்கும் வழங்கலாம். விரைவில் யார் முன் வருகிறார்களோ, இல்லையோ எனது சொந்தப் பதிப்பகமான கிரி ஐயா பப்ளிகேஷன்ஸ் மூலமாக இந்த நூலை அச்சிட்டு வெளியிட உள்ளோம்.

அடுத்து பாலா என்பவரைப் பற்றி சிறிது பார்ப்போம். இவர் சட்டத்தைப் பற்றிய விபரங்களை அறிந்து கொண்ட பின் தன்னுடைய பெயரையே வாரண்ட் பாலா (Warrant Balaw) என்று வைத்துக் கொண்டார். இவர் தற்சமயம் புதியதாக ஒரு புத்தகம் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறார். அது **"கடமையைச் செய் பலன் கிடைக்கும்".** என்ற நூல். இவர் ஏற்கனவே எழுதியிருக்கும் ஐந்து நூல்கள் தனக்கு முன்பு தெரிந்திருந்த சட்ட அனுபவ அறிவைக்கொண்டு எழுதியிருந்தார். ஆனால் தற்சமயம் எழுதிவரும் கடமையைச் செய் பலன்

கிடைக்கும் என்ற நூல் இன்னும் விரிவாக ஏராளமான தகவல்களுடன் விரைவில் வெளிவர இருக்கிறது. இந்த நூல் அனைவரும் படித்துப் பயனடைய வேண்டிய ஒன்றாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த நூலைப் படிப்பவர்கள் வக்கீலின் உதவியை நாடாமல் தாங்களே நீதிமன்றத்தில் சென்று வாதாட முடியும். தங்களுக்கு நியாயமான தீர்ப்பு விரைவில் கிடைக்க வழி ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்றைக்கு நீதிமன்றங்களில் மலைபோல் குவிந்துள்ள வழக்குகள் தீர்வு எட்டப்படாமல் இருப்பதற்குக் காரணங்கள் பல சொல்லப் படுகின்றன. அதிலும் பல வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா ? அந்த வழக்குகள் எந்த சட்டப்பிரிவின் கீழ் வருகிறது என்று தெரியவில்லை என்று நீதிபதியே மறுதேதிக்கு ஒத்திவைக்கிறார். காலவிரயத்தை ஏற்படுத்துகிறார். கேட்பதற்கு உங்களுக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சர்யமாகவும் இருக்கிறது அல்லவா? இன்னொரு இரகசியம் சொல்கிறேன் கேளுங்கள். எந்த நீதிபதியாவது இந்த வழக்கு எந்த சட்டப்பிரிவின் கீழ் வருகிறது என்று தெரியவில்லை. எனவே இந்த வழக்கை ஒத்திவைக்கிறேன் என்று கூறுவாரெனில் அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும். சட்டப் பிரிவுகளைப் பற்றிய அடிப்படை விசயமே தெரியாத நீரெல்லாம் ஒரு நீதிபதியா? என அவர் மீது வழக்குத் தொடுத்தால் அவருடைய பணியே பறிபோய்விடும். **இவ்வாறு சட்டத்தைப் பற்றிய போதிய அறிவு இல்லாமல் வக்கீல்களும், நீதிபதிகளும் நம் நாட்டில் இருக்கும் பொழுது வழக்குகள் எப்படி விரைந்து முடிக்கப்படும் ? மக்களுக்கு எப்படி உடனடியாக நியாயம் கிடைக்கும்.?**

தங்களுடைய வருமானம் ஒன்றை மட்டும் குறிக்கோளாய்க் கொண்டவர்கள், சட்டத்தைப் பற்றிய போதிய அறிவு இல்லாதவர்க்ள என்ன செய்கிறார்கள் எனில் யார் தங்களுக்கு நிறைப் பணம் தருகிறார்களோ அவர்களுக்காக வேலையைச் செய்கிறார்கள். தங்கள் இஷ்டத்திற்கு நீதித்துறையை வருமானத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமான உலகறிந்த உண்மை. சமீபத்தில் வெளிவந்த "நிமிர்ந்து நில்" திரைப்படம் இதற்கு நல்ல உதாரணம். காசு கொடுத்தால் போதும், எந்த இடத்தில் எவ்வளவு வேண்டுமானலும் ஏன்? எதற்கு என்ற கேள்விகளின்றி கையெழுத்துப் போடுகிறார்கள். இது அரசுத் துறைகளில் அன்றாடம் நடைபெறுகின்றதை நாமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

தற்சமயம் பாலா எழுதிவரும் சட்டத்தைப் பற்றிய நூலை வெளியிட மூன்றிலிருந்து ஐந்து இலட்ச ரூபாய் வரை அவருக்கு நிதி உதவி தேவைப்படுகிறது. அவரிடம் ஏற்கனவே இந்திய சட்ட அமைச்சகம் வழங்கிய நிதி உதவித் தொகை ரூ.25000மும் மற்றும் இவரால் சட்ட ஆலோசனை பெற்று பயனடைந்தோர் ரூ.1,00,000 வழங்கியதையும் சேர்த்து 1,25,000 ரூபாயும் அவர் கையிருப்பில் உள்ளது. ஆனால் இந்த நூலை எழுதி முடித்து பத்தாயிரம் பிரதிகள் அச்சிட்டு நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், நூலகங்கள் என்று எல்லா இடங்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டுமெனில் இன்னும் நிதி உதவி தேவைப்படுகிறது.

நான் கடந்த ஆறுமாதங்களுக்கு முன் பாலா அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் பொழுது ஒரு விசயத்தைச் சொன்னார். மூன்று இலட்ச ரூபாய் பணம் இருந்தால் இந்த நூலை வெளியிட்டுவிடலாம். பணமின்மையால் என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கிறேன் என்றார். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. மனித சமுதாயத்திற்கு உதவும் பொது நோக்குடன் ஒரு மனிதர் சட்டம் பற்றிய விழிப்புணர்வை அனைவரும் பெறவேண்டும் என்று நூல் ஒன்றை எழுதுகிறார். ஆனால் ஒரு மூன்று இலட்ச ரூபாய் பணத்திற்காக அந்தப் பணி தடைபடுவதா? என்று என்னுள் கேள்வி எழுந்து கொண்டே இருந்தது. ஒரு ஆண்டுகாலமாக



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

இந்த மூன்று இலட்ச ரூபாய் கிடைக்காமல் அவர் கஷ்டப்பட்டு நேரத்தை வீணாக்கிவிட்டாரே என்று கவலைப்பட்டேன். உதவும் நோக்கம் இருப்பவர்கள் மனது வைத்தால் மூன்று இலட்ச ரூபாய் ஒரு பெரிய விசயமே இல்லை. நான் அவரிடம் ஒரு கருத்தை உறுதியாகச் சொன்னேன். பணத்தைத்தேடி இனிமேல் நீங்கள் எங்கும் அலையவேண்டாம். நீங்கள் இருக்கும் இடத்திற்கு அதுவே தேடி வரும். நீங்கள் புத்தகம் எழுதி முடிக்கும் பணியை மட்டும் எந்த கவலையுமின்றி தொடங்குங்கள். நான் எண்ணால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன். அதுவரை ஏற்கனவே உங்களிடம் உள்ள 1,25,000 ரூபாயை வைத்துக்கொண்டு வேலையைத் தொடருங்கள் என்று உறுதி அளித்திருக்கிறேன். அந்த நூல் வெளியானால் நான் முன்பே எழுதி வெளியிட்டுள்ள அனாடமிக் செவிவழித் தொடு சிகிச்சையைப் பின்பற்றி உலகம் முழுவதும் பல இலட்சம் மக்கள் குணமடைந்திருப்பதைப் போன்று இதுவும் பல கோடி மக்களுக்கு பயனுள்ளதாய் இருக்கும். மருத்துவர்களுக்கு மருத்துவம் தெரியாது. எனவே நமக்கு நாமே தான் மருத்துவர் என்று நம்முடைய சிகிச்சை முறையில் கூறுவதைப்போன்று வழக்கறிஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும் சட்டம் பற்றி அவர்கள் அறியாததை இந்நூலின் வழியாக நாம் அறியச் செய்வோம். நமக்காக நாமே வாதாடி நியாயத்தைப் பெறுவோம். எனவே இந்நூல் வெளியாகும் நாளை ஆவலோடு எதிர்நோக்குவோம்.

வாரண்ட் பாலா அவர்கள் குறிப்பிடும் இன்னொரு முக்கியமான விசயம் என்னவெனில் அவரவர் வழக்குகளுக்கு அவர்களே நீதிமன்றம் சென்று வாதாடவேண்டும். நான் யாருக்காகவும் வந்து வாதாடமாட்டேன். ‘‘தங்களுடைய வழக்குகளுக்கு எப்படி நீதிமன்றத்தை அணுகி வாதாடுவது? எனும் விசயத்தைச் சொல்லித் தருவது மட்டுமே என் கடமை” என்று கூறுகிறார். நாம் எப்படி அனாடமிக் சிகிச்சையில் அவரவர் நோயை அவரவரே குணப்படுத்திக் கொள்ள வழிகாட்டுகிறோமே தவிர நாம் யாருக்கும் சிகிச்சை அளிப்பதில்லை. ஆனால் கற்றுத் தருகிறோம் அல்லவா? அதேபோல அவரும் வழி காட்டுவார். தானே தான் வாதாடி வெற்றிபெற வேண்டும். மீன் பிடிக்கச் கற்றுத்தருவார். மீன் பிடித்துத் தரமாட்டார். எனவே யாரும் இவரை நாடித் தங்களுடைய வழக்குக்காக வாதாடுமாறு கேட்டுக்கொள்ள வேண்டாம். மிக எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் அவருடைய வழிகாட்டுதல்கள் இருக்கிறது. இது நல்ல விசயம் தானே?

ஏற்கனவே “நீ வாழ நீயே வாதாடு” எனும் ஒலித்தகடு (Audio DVD) வெளியிட்டு இருக்கிறார் பாலா. இதில் குரல் கொடுத்திருப்பவர் இவருடைய சட்ட ஆலோசனையைக் கேட்டு தானே வாதாடி வென்ற ஒருவர். அதன் பிறகு நீதியா? அநீதியா? நீதிக்கு சமாதியா? எனும் காட்சிப் படத்தினை வெளியிட்டிருக்கிறார். அதில் நீதிபதி ஒருவர் பங்கேற்று அந்தக் காட்சிப் பதிவில் பேசி இருக்கிறார். இதனை இணையதளத்தில் Youtube-ல் காணலாம். இது தவிர ஒலித்தகடுகளையும் (Audio DVD) வெளியிட்டிருக்கிறார். தற்சமயம் இவர் எழுதி வெளியிடப் போகும் நூல் தான் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் நூல்களில் மைல்கல்லாக இருக்கப் போகிறது. ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப்போகிறது. இவரது இணையதளமான www.neethiyaithedi.org-ல் மேலும் விரிவான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு முக்கியமான அறிவிப்பு : வாரண்ட் பாலா அவர்களை தங்கள் வழக்குத் தொடர்பாக அவரைச் சந்திக்க விரும்புவர்கள் தயவு செய்து மூன்று மாதங்களுக்கு அவரை அணுக வேண்டாம். தற்பொழுது அவர் எழுதிக் கொண்டிருக்கும் புத்தகத்தினை முழுமையாக படித்து வெளியிட்டபின் முதலில் அந்தப் புத்தகத்தினை படித்து முடித்துவிட்டு பின்னர் அவரைச் சந்திக்கச் செல்லலாம். என்னைச் சந்தித்து மருத்துவ ஆலோசனை கேட்டு வருபவர்களை முதலில் நான் வெளியிட்டுள்ள புத்தகம் மற்றும் டிவிடி-ஐ பார்த்துவிட்டுப்

வாருங்கள. அதன் கேள்விற்கு பதில் கூறுவேன் என்று சொல்வதை வழக்கமாக வைத்திருக்கிறேன். வாரண்ட் பாலா அவர்களும் தான் எழுதிய புத்தகங்களை முழுமையாகப் படித்துவிட்டு வருபவர்களுக்கு மட்டுமே சட்ட ஆலோசனை வழங்குகிறார். ஆனால் நீதிமன்றம் சென்று அவரவர் தான் தாங்கள் வழக்கிற்காக வாதாடிக் கொள்ள வேண்டும். அவர் மிக எளிமையாக வாதாடுவதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்துவிடுவார். வக்கீல், நீதிபதி ஆகியோரைவிடவும் சிறப்பாக நீங்கள் சட்டத்தைப் புரிந்து கொண்டு வாதாடுவதைப் பார்க்கும்பொழுது நிச்சயமாக அவர்கள் மிரண்டு விடுவார்கள். ஏனெனில் எப்பொழுது ஒரு தனிமனிதன் நீதிகேட்டு தானே நீதிமன்றத்தில் வாதாடச் செல்கிறானோ சட்டம் பயப்பட ஆரம்பிக்கும். நீதித்துறையில் தவறுசெய்வோர் பயப்படுவார்கள். எனவே சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து அதை செம்மைப் படுத்துவோம். விரைவில் சட்டம் எல்லோருக்கும் நியாயமான தீர்ப்புகளை விரைந்து அளிக்கும் வண்ணம் நாம் மாற்றுவோம்.

வாரண்ட் பாலா அவர்கள் இந்த சமுதாயத்திற்காக ஆற்றும் சேவைக்காக தேவைப்படும் நிதிஉதவியைப் பெற்றுத்தருவதாக நான் உறுதி அளித்திருக்கிறேன். அவருக்கு உதவ எண்ணும் அன்பு உள்ளங்கள் warrantbalaw@gmail.com என்ற முகவரியில் அவரைத் தொடர்பு கொண்டு அவருக்கு நிதி உதவி செய்யலாம். வழக்குத் தொடர்பாக தற்சமயம் மூன்று மாதங்களுக்கு அவரைத் தொடர்பு கொள்ள வேண்டாம். நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் மட்டும் மேற்கண்ட மின்னஞ்சல் முகவரியில் அவரைத் தொடர்பு கொள்ளுங்கள். அவருக்குத் தேவைப்படும் நிதி உதவி கிடைக்கவில்லையெனில் நான் அந்த நிதியை அளிப்பதாக உத்திரவாதம் கொடுத்திருக்கிறேன். நிச்சயமாக அவருக்கு நிதி உதவி கிடைக்க ஏற்பாடு செய்துவிடலாம். பொதுமக்கள் எந்த அளவிற்கு அவருக்கு நிதிஉதவி அளிக்கிறார்களோ அதுபோக மீதம் உள்ள தொகைக்கு நான் பொறுப்பு. எனவே நீங்கள் எவ்வளவு உதவி செய்கிறீர்களோ அந்த அளவிற்கு எனக்கு நிதிச்சுமை குறையும்.

நல்ல செயல்களுக்கு நாம் என்றுமே ஆதரவு தரத் தவறியதில்லை. ஒரு தனிமனிதன் தன்முயற்சியால் இந்த சமுதாயத்திற்கு சட்ட விழிப்புணர்வை ஊட்டவேண்டும் எனப் பாடுபடும் பொழுது நாம் அதற்குத் துணை நிற்க வேண்டாமா?

வாருங்கள்! புதிய சமூக மாற்றத்தினை உருவாக்குவோம். மாற்றத்தினை உருவாக்க எண்ணும் முன்னோடிகளுக்குக் கை கொடுப்போம். அனாடமிக் தெரபி சிகிச்சை மூலம் எவ்வாறு நமக்கு நாமே மருத்துவர் ஆக முடியுமோ அதுபோல வாரண்ட் பாலா அவர்களின் நூலைப் படித்து நமக்காக நாமே வாதாடி நியாயத்தை நிலை நாட்டுவோம். என உறுதி ஏற்போம்.

இந்நூல் இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளிலும் வெளியிட வேண்டும் என்பதால் அதற்கான பணியினையும் முன்னெடுப்போம். காவல்துறை, வக்கீல்கள் மற்றும் நீதிபதிகளால் பாதிக்கப்பட்டோர், நீதிக்காக நெடுங்காலம் காத்திருப்போர் என அனைவரும் ஒன்று கூடுவோம். சட்டச் சிக்கல்கள் எவையென்றாலும் அவை அனைத்தையும் வெல்ல நமக்காக நாமே வாதாடி நீதி பெறுவோம்.

**ஒவ்வொரு தனிமனிதனும் சட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு பெற்றால் அந்த சமுதாயம் வல்லமை பெற்றுவிடும்.**

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

**ஹீலர் பாஸ்கர்**

நிறுவனர், அனாடமிக் தெரபி ஃபவுண்டேஷன்,

கோவை



# ஐருகண்டி... ஐருகண்டி...

- ஹீலர் பாஸ்கர்

பொதுவாக கடவுளை மனிதன் தேடிச் செல்வதன் நோக்கம் என்ன?

ஆன்மீகத்தில் முக்தி பெறுவதற்கா?

இறைநிலை அடைவதற்காகவா?

தொண்ணூறு சதவிகிதம் மக்கள் மேலே சொன்ன இரண்டு காரணங்களுக்காகவும் கடவுளைத் தேடு வதில்லை.

பிறகு?

அன்றாட வாழ்வில் மனிதனுக்கு என்னென்ன தேவையோ, அதையெல்லாம் கேட்டுப் பெறுவதற்கே சராசரி மக்கள் கடவுளை நாடுகிறார்கள். உதாரணமாக உடல் ஆரோக்கியம், அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி, பணம், குடும்ப ஒற்றுமை, வேலை வாய்ப்பு, பதவி உயர்வு, கல்வி என்று பலவித காரணங்களை முன்னிட்டு அவற்றையெல்லாம் கடவுள் ஏற்படுத்திக் தருவார் என்ற நம்பிக்கையில் மனிதன் கடவுளைத் தேடிச் செல்கிறான். மனிதனின் தேவைகளை நிறைவேற்றி வைப்பராகவே பெரும்பாலானவர்களால் கடவுள் பார்க்கப்படுகிறார். தேவைகளை நிறைவேற்றிக் தருவதற்காக இறைவனை வேண்டுதல் ஆன்மீகம் அல்ல.

அது ஒரு வியாபாரம். நம் தேவையை நிறைவேற்றினால் இறைவனுக்கு காணிக்கை அளிப்பதாக வேண்டி கொள்வது ஒப்பந்தமே தவிர ஆன்மீகம் அல்ல.

எந்தத் தேவையும் இல்லாத பொழுதும் இறைவனையே நினைத்தப்படி இருத்தல், அதிகபட்ச மகிழ்ச்சியை அடைந்திருக்கும் பொழுதும் இறைவனை மறவாமல் இவ்வளவு மகிழ்ச்சியைத் தந்த இறைவா ! உனக்கு நன்றி என்று மனதார எண்ணிக்கொள்வதும் எந்த நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும் எல்லாவற்றிலும் இறைவனையே காண்பதும் தான் உண்மையான ஆன்மீகம்.

இப்பொழுது நாம் பார்க்க இருப்பது ஆன்மீகம் தொடர்புடையதும் அதை நிவர்த்தி செய்ய வேண்டிய வழிமுறைகளையும் பற்றியது.

இந்து சமுதாயத்தில் ஏராளமான கோயில் கட்டப்பட்டு பலகாலமாக மக்களின் வழிபாட்டுத் தலங்களாக அவை இருந்து வருகின்றன. பொதுமக்கள் வழக்கமாக கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து வருகின்றனர். மக்கள் கோவில்களுக்குச் சென்று வருவதன் நோக்கம் என்ன?

பலவித பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு நிம்மதி கிடைக்க வேண்டும் என்று தானே? ஆனால் அவ்வாறு சென்று வருவதால் நிம்மதி கிடைக்கிறதா என்றால் சந்தேகம் தான்.

முந்தைய காலங்களில் மக்கள் கோவிலில் வழிபாடு செய்யும் பொழுது அர்ச்சகர்கள் மந்திரங்கள் கூறி அர்ச்சனை செய்வார்கள். இதனால் அந்த கற்சிலைகளுக்கு ஒரு வித சக்தி கிடைக்கப்பெற்றது. வழிபட்ட மக்களும் சக்தி பெற்றனர். அந்த இடம் ஒரு சக்திமிக்க அதிர்வினைப் பெற்றது. அந்த அதிர்வு நிம்மதியை மகிழ்ச்சியை மக்களுக்கு தந்தது. கோவிலில் சக்தி நிலை ததும்பி இருந்தது. மக்கள் அதனால் பயனடைந்தனர்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் கோவில்களில் அர்ச்சனை செய்வது வேறுவிதமாக வேறு மொழிகளில் இன்று நடைபெறுகிறது. பக்தர்கள் கூட்டம் அளவு கடந்து வரும் கோவில்களில் எல்லாம் அனைத்து அர்ச்சகர்களும் இன்று ஒரே விதமான அர்ச்சனையைத் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அது என்ன அர்ச்சனை தெரியுமா? நான் சொன்னால் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். இது எப்பொழுது துவங்கியது? யார் ஆரம்பித்து வைத்தார்கள் என்ற விபரம் தெரியவில்லை. ஆனால் எல்லா இடங்களிலும் தொடர்ந்து இந்த அர்ச்சனை ஒலித்து கொண்டே இருக்கிறது.

அந்த அர்ச்சனை இதுதான் ''தள்ளு'' ''தள்ளு'' ''சாமி கும்பிட்டாச்சா'' விலகு அந்தப்பக்கம் நகர்ந்துபோ சாமி கும்பிட்டாச்சல்ல நகர்ந்து போ, ஜருகண்டி.. ஜருகண்டி... நேரமாச்சு, காணிக்கை கொடு, காணிக்கை கொடு "தட்டுல தட்சணை போடு" போன்ற இந்த வார்த்தைகள் தான் அனைத்து இடங்களிலும் அதிகம் கேட்க முடிகிறது.

பல நூறாயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்ததும், நம் சித்தர் பெருமக்களும், முன்னோர்களும் தங்கள் ஆற்றலைக் கொண்டு நிர்மாணித்த சக்தி நிறைந்த திருத்தலங்கள் இன்று நாம் வழிபடும் கோயில்கள். அந்தளவு மகத்துவம் நிறைந்த கோவில்களில் இன்றுள்ள அர்ச்சகர்கள் தங்களுக்கு காணிக்கை பெற்றுத் தரும் இடமாகவும், வர்த்தக நிலையமாக கருதுவதையும் எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? அர்ச்சனை, தீபாராதனை போன்றவற்றை வேகவேகமாக செய்து முடித்து மக்களை காணிக்கையிடச் சொல்லிவிட்டு "தள்ளு தள்ளு" என்று விரட்டி விடுகின்றனர். பின்னால் வரும் மக்களிடமும் அதே போல காணிக்கைகள் அறுவடை செய்வதற்காக மக்களை ஆட்டு மந்தைகளைப் போல் அடைத்து வைக்கின்றனர் சாமி தரிசனம் செய்யப் படுகிறதோ, இல்லையோ தள்ளு தள்ளு என்று அவ்விடத்தை விட்டு பக்தர்கள் வெளியேற்றப் படுவதையே குறிக்கோளாய் வைத்திருக் கிறார்கள்.

பொதுமக்கள் எதை நாடி கடவுளின் சன்னிதானத்திற்கு வருகிறார்களோ அது அங்கு கிடைப்பதில்லை. நிம்மதி தேடி வரும் பக்தர்கள் நிம்மதியாய் சாமி தரிசனம் செய்ய முடிவதில்லை. கடவுளுக்கு முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு எல்லாம் காலாவதியாகிவிட்டது. பெரும்பாலான கோவில்களில் சுவாமி தரிசனம் செய்வதற்கு என்று தனியே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை செலுத்துபவர்கள் சுவாமிக்கு அருகில் சென்று சற்று நிதானமாக தரிசனம் செய்யலாம். கட்டணமின்றி பொதுவழியில் இலவச தரிசனத்திற்கு செல்லும் பக்தர்களுக்கு சற்று தூரத்தில் தான் சுவாமி தரிசனம். அதற்கும் நேர அவகாசம் கொஞ்சமும் இல்லை. நகர்ந்து, நகர்ந்து போகிற போக்கில் சுவாமியை தரிசனம் செய்து கொள்ளவேண்டும். மனமுருகி சற்று கடவுளை வேண்டிக் கொண்டிருப்பவர்களின் கையை தர தர என்று இழுத்து நகர்த்தி தள்ளு என்று ஒரே தள்ளாய் அவர்களை வெளியே தள்ளி விடுகிறார்கள். பெரும்பாலும் புண்ணியத் தலங்களில் இன்றைக்கு வழிபாடு என்பது மேற்படிதான் நடந்து கொண்டிருக்கிறது.

பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்வதைத் தடுத்து நிறுத்தி அவர்களை வெளியே போ, ஜருகண்டி-என்று தொடர்ந்து கூறிக்கொண்டு இருப்பதினால் கண்டிப்பாக ஒருநாள் இதைச் சகித்துக் கொள்ள முடியாமல் சுவாமியே அங்கிருந்து எழுந்து வெளியே ஓடிவிடப் போகிறது. அங்கிருக்கும் தெய்வீகத் தன்மை முழுவதும் வெளியேறிவிடும்.

பக்தர்கள் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வரும் சமயமெல்லாம் தங்களின் குறைகளைச் சொல்லித்தான் புலம்பி வருகின்றனர். தனக்கு தேவையான கோரிக்கைகளை மட்டுமே கடவுளிடம் நிறைவேற்றச் சொல்லி வேண்டிக் கொள்கின்றனர். ஆனால் இதுவரை யாருமே

கடவுளை நலம் விசாரித்ததில்லை. கடவுளே ! நீ நன்றாக இருக்கிறாயா? உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்களா? நேரம் தவறாமல் வேளாவேளைக்கு உணவு படைக்கிறார்களா? உனக்கு எந்தக் குறைவுமில்லையே? உன் உடம்பை நன்றாக பார்த்துக் கொள் என்று கடவுளிடம் கனிவாகக் கூறியதுண்டா? இதுவரை இல்லை.

இனிமேல் நாம் நம் கடவுளுக்காக அக்கறை கொள்வோம். மக்கள் தங்களின் நிம்மதி மற்றும் மகிழ்ச்சியான வாழ்வு வேண்டி வழிபாட்டுத் தலங்களுக்கு வருகிறார்கள். அந்த இடத்தில் உள்ள சக்திமிக்க அதிர்வுகளை மக்கள் பெற்று பயன் பெற வேண்டுமெனில் அந்த அதிர்வுகளை சிதைத்து அழித்துவிடும் வண்ணம் “தள்ளு” போ “ஜருகண்டி” என்று கூறிக்கொண்டு இருப்பதை முற்றிலும் தவிர்க்கவேண்டும். இந்தக் கட்டுரையைப் படிக்கும் நல்ல உள்ளங்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள் ! நீங்கள் அடிக்கடி சென்று வழிபட்டு வரும் கோவில் நிர்வாகிகள் அர்ச்சகர்கள் ஆகியோரிடம் இது குறித்துப் பேசுங்கள். எதிர்மறை அதிர்வுகளை ஏற்படுத்தும் இதுபோன்ற வார்த்தைகளை தொடர்ந்து உபயோகிக்கும் பொழுது அங்கிருக்கும் சக்திநிலை அழிந்துவிடும். அதனால் வழிபட வரும் பக்தர்களுக்கு நன்மை ஏற்படாது. மாறாக கோபம், கவலை, விரக்தி, பயம் ஏற்படும். சக்தி குறைந்த இடத்தில் மக்கள் கூடுவதால் இந்த எதிர்மறை அதிர்வுகளின் தாக்குதலால் நோய் ஏற்படும். எனவே இதைக் குறிப்பிட்டு அவர்களிடம் புரிதலை ஏற்படுத்துங்கள். அவ்வாறு மாற்றம் ஏற்படும் பொழுதுதானே அனைவருக்கும் நன்மை கிடைக்கும்?

இறுதியாக ஒன்று ! தங்களுக்காக என்று குறுகிய எல்லையில் சிலர் சிந்திப்பார்கள். மற்ற எல்லோரும் நல்ல வாழ்வு வாழவேண்டும் என்று பலர் சிந்திப்பார்கள். இதிலிருந்து சற்றுகூடுதலாக நாம் என்ன சிந்திக்கலாம்? எல்லோரும் நன்றாக வாழவேண்டும். மக்களின் வழிபாட்டுத்தலங்களிலும் நேர்மறை அதிர்வுகளே நிறைந்து எல்லோருக்கும் பயன்படவேண்டும் என்ற நடைமுறையை செயல்படுத்துவோம். கடவுளுக்காக அக்கறைப்படவும் நாம் சிறிது நேரத்தை ஒதுக்குவோம். அப்பொழுதுதான் நாமும் நன்றாக வாழ்வோம். கடவுளும் சக்தி நிலை அதிர்வுகளை நன்றாக வெளிப்படுத்துவார்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

சென்ற (மார்ச்)மாத இதழில்...

**ஜோதிடர்கள் ஜாக்கிரதை !**
**காதுக்கென்ன பூட்டு ?**
**கொட்டைப்பாக்கும் கொழுந்து வெற்றிலையும் போட்டால் குழந்தை பிறக்கும் !**
**ஜனனி...** – ஹீலர் பாஸ்கர்

**இயற்கை விவசாயம்.**
–வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்

**ஹீமோகுளோபின்** உடலில் அதிகரிக்க எளிய வழி !
நல்லாசிரியர் **வி. சுந்தர்ராஜன்,**

**இயற்கை உணவு.**
திரு. **ஆ.சா. ரமேஷ்**



இனிவரும் இதழில்...

**வேப்பிலை வைத்தியம் !**
**மயிலிறகு வைத்தியம் !**
**ஒரு ஒய்வே ஒய்வு எடுக்கிறதே ?!**
**சிறுநீரக கல்லுக்கு பீன்ஸ் வைத்தியம்!**
– ஹீலர் பாஸ்கர்

**இயற்கை விவசாயம்.**
–வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார்

மேலும் ஏராளமான பயனுள்ள தகவல்களுடன்...

**தவறாமல் படியுங்கள்.... பயன் பெறுங்கள்...**



- ஹீலர் பாஸ்கர்

# உயிரே ! உயிரே !!

## வந்து என்னோடு கலந்துவிடு

“பம்பாய்” – திரைப்படத்தில் இடம்பெற்ற இனிமையான அனைவரும் ரசித்துக் கொண்டாடும் பாடலின் வரிகள் இங்கு தலைப்பாக இருக்கிறது எனவே இதைப் பார்த்தவுடன் அந்தப் படத்தைப் பற்றியோ இயக்குனர் மணிரத்னம் பற்றியோ ஏதோ கூறப்போகிறேன் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். உயிர் சம்பந்தமான ஒரு புதிய விசயத்தையும் கணவன், மனைவி இருவரிடையே உயிராற்றலின் பரிமாணம் எப்படி வேலை செய்கிறது என்பதையும் பார்க்கப் போகிறோம் அவ்வளவே. அந்த திரைப் படத்திற்கும் நாம் பார்க்க இருக்கும் விசயத்திற்கும் வேறு எந்த தொடர்பும் இல்லை.

கணவன், மனைவி இருவரும் உடலால் இணையும்பொழுது அவர்களுக்குள் ஒரு சக்திநிலை இருவருக்குள்ளும் பரிமாற்றப் படுகிறது. அதாவது பிராண சக்தி மிகுந்த ஒன்றும் பிராண சக்தி குறைவாக உள்ள ஒன்றும் சேரும்பொழுது இரண்டு பிராண சக்திகளும் கலக்கின்றன. அதிகமாக உள்ள பிராணன் குறைவாக பிராணன் உள்ள இடத்தை நோக்கிப் பாய்கிறது. உதாரணமாக இரண்டு பாத்திரங்களை எடுத்துக் கொள்கிறோம். இரண்டில் ஒரு பாத்திரத்தில் சாதாரண வெப்பநிலையில் உள்ள அதாவது கொதிக்க வைக்காத பச்சைத் தண்ணீரையும் இன்னொரு பாத்திரத்தில் நன்கு கொதிக்க வைத்த தண்ணீரையும் கொண்டு நிரப்புகிறோம். அடுத்த தாக இந்த இரண்டு பாத்திரங்களில் உள்ள நீரையும் மூன்றாவதாக ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் கலந்தால் அங்கு என்ன நடக்கும்? நன்கு கொதிக்க வைத்த தண்ணீர் குளிர்ந்த நீருடன் சேரும் பொழுது வெப்பநிலை குறைந்து விடுகிறது. சூடு சமன் செய்யப்பட்ட நீராக புது வகையான நீராக அது மாறிவிடும்.

அதே போலத்தான் சக்தி எங்கு அதிகமாக இருக்கிறதோ அது குறைவான இடத்தை நோக்கிப் பரவ ஆரம்பிக்கிறது. குழந்தைகளை யார் வேண்டுமானாலும் எடுத்து வைத்துக் கொள்ளக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஏனெனில் சக்தி குறைந்தவர்கள், நோய் வாய்ப்பட்டவர்கள் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சும் பொழுது ஆரோக்கியமாக உள்ள குழந்தை நோய் வாய்ப்பட்டுவிடும். ஆரோக்கியமான குழந்தையிடம் இருந்து பிராணன் நோயாளிக்கு சென்று விடும். நோயாளியான ஒருவர் அல்லது பிராணன் சக்தி குறைந்த ஒருவர் பிராணன் அதிகம் ஒருவரை தொட்டாலா, அருகே சென்றதாலோ கூட பிராணன் அதிகம் இருப்பவரிடம் அவரிடம் இருந்து பிராணனை எடுத்துக் கொள்கிறார். அருகே இருப்பதாலோ, தொடுவதாலோ பிராணன் பறிபோகிறது என்றால் கணவன், மனைவி உடலுறவின் பொழுது எவ்வளவு பிராணன் இழப்பு ஏற்படும் ? ஆயிரம் மடங்கு சக்தி பரிமாற்றம் இந்த உறவின்பொழுது நிகழ்கிறது. இது குறித்து யாருமே பொதுவாக சிந்திப்பதோ, பேசுவதோ இல்லை. இதைப்பற்றி அறிந்துகொள்ளாமல் யாரும் ஆரோக்கியமாக வாழ்வது என்பது இயலாது.

என்னிடம் மருத்துவ ஆலோசனைக்கு மற்றும் சிகிச்சைக்கு வரும் தம்பதியர்கள் எனில்

அவர்கள் இருவரையும் ஒன்றாக வரச்செய்து ஆலோசனை கூறுகிறேன். கணவன் அல்லது மனைவிக்கு மட்டும் தனித்து ஆலோசனை கூறுவதில்லை. கணவன், மனைவி இருவருக்கும் சக்திநிலை சமன்செய்யப்பட்டால் தான் நோய் குணமாகும். கணவன், மனைவி உடலுறவு கொள்ளும் பொழுது இருவரில் யாருக்கு பிராணசக்தி குறைவாக உள்ளதோ பிராணசக்தி அதிகம் உள்ள நபரிடம் இருந்து அவர் பெற்றுவிடுவார். இதை எப்படி கண்டு கொள்வது எனில் உடலுறவுக்குப் பின்னால் யாருடைய உடல் நடுக்கமடைகிறதோ, தளர்வாக, குளிர்ச்சியாக இருக்கிறதோ, பலவீனமாக, துன்பமாக உணர்கிறாரோ அவருடைய பிராணன் மற்றவருக்குச் சென்று விட்டது என்றும் இவருக்கு பிராணசக்தி இழப்பு ஏற்பட்டுவிட்டது என்றும் புரிந்து கொள்ளலாம்.

உடலுறவுக்கு பின்னர் முதலில் உடல் சோர்வாக இருந்தவர்கள் கண்பார்வை பிரகாசமாக இருக்கிறது என்றும் ஏதோ ஆவி உடலினுள் நுழைந்தது போல அவ்வளவு பலம் பெற்றுவிட்டது போலவோ உணர்கிறார்கள் என்றால் அவர்கள் தன் எதிரே இருந்தவரிடம் இருந்து பிராணசக்தியைப் பறித்துக் கொண்டார் என்று பொருள். இவ்வாறு உடல் உறவு கொள்ளும் ஒவ்வொரு முறையும் சக்தி பரிமாற்றப்படுகிறது.

திருமணத்திற்கு முன்பு வரை ஒருசிலர் நன்கு திடகாத்திரமாக ஆரோக்கியமாக இருப்பர். வியாபாரம் அல்லது தொழிலில் ஈடுபட்டு சிறப்பாக சம்பாதித்து வருவார்கள். நிம்மதியாக சந்தோசமாக வாழ்ந்து வருவார்கள். திருமணத்திற்குப்பிறகு இதற்கு நேர்மாறாக அவரால் தொழிலில் சிறப்பாக ஈடுபடமுடியாது. தளர்வாகவும் மிக பலவீனமாகவும் உணர்வார்கள். மகிழ்ச்சி, நிம்மதி இழந்து விடுவார்கள். இவ்வாறான நபர்களைப் பற்றி நிறைய நம் ஊர்களில் பார்த்தும் கேள்விப்பட்டும் இருப்போம்.

காரணம் என்னவெனில் இவரிடம் உள்ள பிராணசக்தியை அவருடைய துணைவர் தினசரி எடுத்துக் கொண்டு இருப்பதால் அவரால் முன்பு போல் சிறப்பாக வீரியமாக செயல்பட முடியவில்லை. ஒருசில வீடுகளில் இவ்வாறு புலம்புவார்கள். மருமகள் வந்த நேரம் வியாபாரம் சரிந்துவிட்டது. தொழில் ஒழுங்காக நடக்கவில்லை. குடும்பத்தில் நிம்மதி இல்லை. மகிழ்ச்சி இல்லை. ஆரோக்கியமாக இல்லை என்று குறைப்பட்டுக் கொள்வார்கள். எல்லாவற்றுக்கும் அவர் தான் காரணம் என்று குற்றம் சாட்டுவார்கள். இது ஒருவிதத்தில் உண்மை.

அதே சமயம் சில ஆண்கள் பொறுப்பின்றி எதிலும் பற்றுதலின்றி எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்யாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். அவர்களோ திருமணத்திற்குப் பிறகு ஒழுங்காக இருப்பார்கள். எந்தத் தொழிலாக இருப்பினும் சிறப்பாக செய்வார்கள். நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ்வார்கள். அப்படியென்றால் அவர்கள் தன் மனைவியிடம் இருந்து பிராணசக்தியை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று அர்த்தம். இவ்வாறு சில காலங்கள் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு சக்தி பரிமாற்றம் நடந்து கொண்டே இருக்கும். சில நேரங்களில் குறிப்பிட்ட காலங்களுக்குப் பின் ஒருவருக்கு சக்திநிலை தீர்ந்துவிடும்.

ஒரு உதாரணம் பார்ப்போம். நன்கு சம்பாதித்து சொத்துக்கள் நிறைய சேர்த்து சமுதாயத்தில் கௌரவமான நிலை அடைந்த ஒருவர் தன் மனைவியுடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகளினால் அவரைப் பிரிந்து சென்று விடுகிறார். அதன் பின்னர் அவருடைய வியாபாரம் மந்தமடைகிறது. ஆரோக்கியம் குறைந்துவிடுகிறது. வாழ்வில் நிம்மதி இன்றி இருப்பார். இதைப் பார்த்து ஊரார் சொல்வார்கள். மனைவி உடன் இருக்கும் வரை அவர் நன்றாக வாழ்ந்து வந்தார். அவரை விரட்டி விட்டதனால் இப்பொழுது அந்தப் பாவம் தான் இவரை இந்த மோசமான நிலைக்கு ஆளாக்கிவிட்டது என்று கூறுவார்கள். இதுவும் உண்மை.

ஆனால் சில கணவர்கள் மட்டுமே மனைவியைப் பிரிந்தால் சந்தோசமாக வாழ்வார்கள்.

தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இது கணவனுக்கோ, மனைவிக்கோ மட்டும் பொருந்தாது. இருவருக்கும் சேர்ந்தே பொருந்தும். இந்தக் கட்டுரையில் இதைக் கூறிக் கொண்டிருக்கும் என்னை ஒரு ஆண் என்ற கண்ணோட்டத்தில் பார்க்காமல் இருவருக்கும் பொதுவான கருத்தைக் கூறும் நபராகவே என்னைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் பல பேர் என்னிடம் தங்கள் கருத்துக்களைக் கூறும்பொழுது நீங்கள் ஆண். அதனால் அவர்களுக்கு ஆதரவான கருத்துக்களை கூறுகிறீர்கள் என்றும் பெண்களுக்கு ஆதரவாகப் பேசுகிறேன் என்றும் இரண்டுவிதமாக சொல்கிறார்கள். ஆனால் தயவுசெய்து ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். நான் ஆணாக இருந்தாலும் எந்தக் கருத்துக்களையும் நடுநிலையோடு அணுக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். எனவே நான் ஆண்களுக்கும் ஆதரவாளன் அல்ல. பெண்களுக்கும் ஆதரவாளன் அல்ல. உண்மைக்கு மட்டுமே என்றும் ஆதரவளிப்பேன். தயவுசெய்து இதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இவ்வுலகில் உள்ள எல்லா கணவன், மனைவிக்குள்ளும் இவ்வாறு சக்தி பரிமாறப்படுகிறது. இந்த விசயத்தை இவ்வளவு தூரம் வலியுறுத்திக் கூறுவதற்கு காரணம் இருக்கிறது. எப்பொழுது ஒரு மனைவிக்குப் புற்றுநோய் வருகிறதோ அதற்குக் காரணம் கணவன். எப்பொழுது ஒரு கணவனுக்குப் புற்றுநோய் வருகிறதோ அதற்குக் காரணம் அவர் மனைவி. கணவன், மனைவி இருவரில் யார் நோய்வாய்ப்பட்டாலும் அதற்குக் காரணம் அவர்களுடைய துணைவர் தான். ஒருவரிடம் உள்ள பிராண சக்தியை ஒருவர் கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக தினமும் உறிஞ்சிக் கொண்டே இருப்பதால் ஒரு கட்டத்தில் கணவனோ, மனைவியோ நோயாளி ஆகிவிடுகின்றனர். கடைசியில் அவர் நோயாளி ஆகிவிட்டார். அவரால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்று அவரை ஒதுக்கிவிட்டுச் செல்வது என்பது உலகமகா பாவம்.

தமிழகத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி தன்னுடைய வயோதிக வயதிலும் சிறுவயதுப் பெண்களை மாதம் ஒருமுறை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார். இன்று அல்லது நாளை இறந்துவிடுவார் என்று மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருக்கையில் அவரோ இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காரணம் மேலே சொன்னதுதான். இந்த விசயம் பலருக்கும் தெரியாது. அவருடன் உள்ள ஜோதிடர்கள் ஆலோசனைப்படி சிறுவயதுப் பெண்களைத் திருமணம் செய்து அவர்களுடன் வாழும் பொழுது அவர்களிடம் உள்ள பிராண சக்தியை இவர் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறியதால் அவரும் அவ்வாறே செய்து வருகிறார். அமைதிப்படை எனும் திரைப்படத்தில் அரசியல்வாதி வேடத்தில் நடித்த சத்யராஜ் இதைப் போன்று செய்வதாக காண்பிக்கப்பட்டது. நமக்கு நினைவிருக்கலாம்.

பிராணசக்தி என்பது ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு பாய்கிறது. உடனே எல்லோரும் இதைச் செய்யுங்கள் என்று நான் கூற வருவதாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம். இந்த விசயத்தை உங்களுக்குப் புரிய வைப்பதற்காக உதாரணங்கள் மூலம் கூறுகிறேன்.

இந்த விசயத்தை உங்களுக்கு நான் விளக்குவதற்கான நோக்கமே வேறு. ஏனென்றால் இந்த விசயத்தைப் புரிந்து கொள்ளாமல் நிறைய குடும்பங்களில் விவாகரத்து பெறுவது வரை பிரச்சனை பெரிதாகிவிடுகிறது. பல குடும்பங்கள் நிம்மதி இன்றி வாழ்ந்து வருகின்றன. பலர் நோயால் அவதிப்படுகின்றனர். எந்த வித மருத்துவ பரிசோதனைகளிலும் (X-Ray, Scan, MRIரத்தப் பரிசோதனை) இது எந்தவிதமான நோய் என்று

கண்டறிய முடிவதில்லை. ஆனாலும் நோயுடனே பலர் வாழ்ந்து வருகின்றனர் காரணம் அவர்களின் சக்தியை அவரது துணை உறிஞ்சிக் கொண்டே இருப்பதுதான். ஒருவரை வாழ வைப்பதற்காக மற்றவர் இறந்து கொண்டே இருக்கிறார். இந்தக் கட்டுரையைப் படிக்கும் பொழுது அனைவரும் ஒன்றைப் புரிந்து கொள்வீர்களாக! யாரும் பயப்படத்தேவை இல்லை. ஏனெனில் இதற்கான தீர்வும் உங்களுக்கு சொல்லப்போகிறேன்.

உங்கள் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ நோய் ஏற்பட்டுவிட்டது எனில் அதற்கு நீங்களும் ஒரு காரணம் என்பதைப் புரிந்துகொண்டு கணவன், மனைவி இருவரும் ஆரோக்கியம் பெறுவதற்கும் பிராண சக்தியைப் பெறுவதற்கும் உண்டான வழிமுறைகளைக் கையாள வேண்டும். சில வீடுகளில் கணவன்மார்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி தினமும் மது, சாராயம் போன்றவற்றை அருந்திவிட்டும் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவரெனில் பாக்கெட் கணக்கில் சிகரெட் புகைத்துவிட்டும் வீட்டிற்குச் செல்வாரெனில் அவருடைய உடலில் பிராணசக்தி, கொஞ்சமும் இருக்காது. வீட்டில் அவருடைய மனைவி எந்தவித கெட்ட பழக்கங்களும் இன்றி ஆரோக்கியமாக மிகுந்த பிராணசக்தியுடன் இருப்பார். போதைப் பழக்கமுள்ள கணவர் பிராண சக்தி மிகுந்துள்ள மனைவியுடன் தாம்பத்யம் கொள்வதனால் மனைவி உடலில் உள்ள பிராண சக்தியை அவர் உறிஞ்சிக் கொள்கிறார். திரும்பவும் வழக்கம் போல போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதால் தினசரி குடித்துவிட்டு வருவதையும் தொடர்ந்து செய்து வருவார். இவ்வாறு தொடர்ந்து நடைபெற்றுவருவதால் அந்த மனைவியின் உடலில் உள்ள பிராணசக்தி குறைந்து கண்களுக்கே தெரியாமல் எப்படி நோயாளியாக மனைவி உருமாறினார்? என எண்ணும்படி ஆகிவிடுவார். எனவே இதைப்புரிந்து கொள்ள அனைவரும் முன் வரவேண்டும்.



புகையிலை மற்றும் போதைப் பழக்கங்களுக்கு அடிமையான ஒருவர் தன் மனைவியுடன் தாம்பத்யத்தில் ஈடுபட்டு வரும்பொழுது அவர் மனைவி அதனால் பாதிக்கப்பட்டு விரைவில் நோயாளியாகிவிடுவார். எனவே அவரின் உயிர் மெல்லப் பிரிந்து கொண்டிருக்கிறது என்பதை உணரவேண்டும். எனவே போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் நபர்கள் தயவுசெய்து அந்தப் பழக்கத்திலிருந்து விடுபட்டு வெளியே வாருங்கள்.

கர்ப்பகாலத்தில் மனைவியுடன் தாம்பத்யம் கொள்ளும், போதை பழக்கத்தில் உள்ள கணவனால் பிறக்கும் குழந்தை ஊனமாகப் பிறக்க வாய்ப்புள்ளது. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறுவார்கள். அதற்குக் காரணம் இதுதான். ஒரு பெண் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களாலும், தியானம், யோகா, குடும்பத்தில் அக்கறை போன்ற சிந்தனைகளால் தன்னை பிராணசக்தியில் மேம்பட்டவளாகப் பராமரித்துக் கொள்கிறாள். இதையே தன் கணவனுக்குத் தந்து அவரை உத்வேகப் படுத்துகிறாள். எனவே ஆண் தான் ஈடுபடும் தொழிலில் சிறப்பாக செயல்பட்டு வெற்றியை ஈட்டுகிறான். ஆண்கள் சிறப்பாக செயல்படுகிறார்கள் நன்றாக ஆரோக்கியமாக இருக்கிறார்கள் என்றாலே அதற்குக் காரணம் பெண்கள் தான்.

இதைப் புரிந்து கொள்ளாத ஆண்கள் தான், தான் திறமைசாலி என்றும் தன்னுடைய ஆற்றலினால் தான் எல்லாவற்றையும் செய்துவிட்டதாக பெருமை பேசிக் கொள்கிறார்கள். மனைவியை மதிப்பதே

இல்லை. ஆனால் மனைவியைப் பிரிந்து வாழ்க்கையில் தோல்வி ஏற்பட்டு கஷ்டப்படும் பொழுது தான் அவர்களுக்கு இந்த உண்மை புரியும். பல குடும்பங்களில் ஒருவரிடம் உள்ள பிராணசக்தியை இன்னொருவர் எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர். அவரிடம் பிராணசக்தி தீர்ந்துபோய் அவர் நோயாளி ஆன பின் அவரை விட்டு விலகிச் சென்று விடுகின்றனர். கிடைக்கும் வரை இலாபம் என்று அவருடைய மொத்த பிராண சக்தியை உறிஞ்சி எடுத்துக் கொண்டு இறுதியில் நோயாளியான பின் சக்கையாக நினைத்து உதறித் தள்ளிவிட்டு சென்றால் அவர்களுடைய நிலை என்னவாகும் ?



கணவன், மனைவி இருவரில் யாருக்கு நோய் வந்தது என்றாலும் பாதிக்கப்பட்டவரை கைவிட்டுவிடாமல் இருவரும் சேர்ந்து நோயைக குணப்படுத்திக் கொள்வதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும். பிராணசக்தி இழந்து விட்டவருக்கு இருப்பவர் அளித்து உதவி செய்யவேண்டும். எனவே உயிர்சக்தியை இருவரும் அதிகரிப்பதற்கான வழியில் இருவரும் ஈடுபடவேண்டும்.

பொதுவாக நாம் அனைவரும் உடலின் சக்தியை செலவு மட்டுமே செய்கிறோம். சேமிப்பதைப் பற்றி யாருமே யோசிப்பதில்லை. உயிர்சக்தி என்பது பணமதிப்பைப் போன்றது. சம்பாதிக்கவும் வேண்டும். செலவு செய்யவும் வேண்டும். அதேபோல சம்பாத்தியத்தை சேமிக்கவும் வேண்டும். ஆனால் நாம் சம்பாதிப்பதும் இல்லை. சேமிப்பதும் இல்லை.

எனவே கணவன், மனைவி இருவரும் தினசரி யோகா, நடைபயிற்சி, மூச்சுப்பயிற்சி, தியானம் போன்றவற்றைச் செய்து சக்தியை உடலில் சேமிக்கவேண்டும். பிராணசக்தியை நாம் மற்றவருக்கு கொடுக்கவேண்டுமே ஒழிய நாம் மற்றவரிடம் இருந்து பிடுங்கக் கூடாது. நாம் மற்றவர்களுக்கு கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. அவர்களிடம் இருந்து பிடுங்காமலாவது இருக்கலாம். அனைவருக்கும் நன்மையைத் தரும். யோசிப்பீர்களா?

நான் பல நோயாளிகளை ஆராய்ந்து பார்த்துவிட்டேன். பலருக்கும் பலவித நோய்களும் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் இந்த பிராணசக்தி இழப்புதான் என்று இறுதியாக உணர்ந்து கொண்டேன். எனவே ஒருவருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டால் பிராணசக்தியைக் தக்கவைத்துக் கொள்வதற்கு கணவன், மனைவி இருவரும் சேர்ந்து முயற்சி எடுக்கவேண்டும்.

விரைவில் இது தொடர்பாக விளக்கமான ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட உள்ளேன். அதில் பல இரகசியங்கள் விளக்கப்படும். பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும் விதமாக அந்த நூல் இருக்கும். அனைவரும் படித்து அதன் பலனை அடைய வேண்டும் என்பதே என் விருப்பம். அதற்கான பணிகளை துவங்கிவிடுவேன். 2015 ஆம் ஆண்டில் அந்தப் புத்தகம் உங்களுக்குக் கிடைக்கும் என நம்புகிறேன். தற்பொழுது கணவன், மனைவி இருவரும் கடைப்பிடிப்பதற்காக ஒரு யோசனை சொல்கிறேன்.

உடலுறவு வைத்துக் கொள்வதற்கு முன் கணவன், மனைவி இருவரும் அரைமணிநேரம் தியானம் செய்து பகல் முழுவதும் இழந்த சக்தியை சேமித்துக் கொண்டு பின்னர் ஈடுபடலாம். இதனால் ஆரோக்கியமாக நிம்மதியாக வாழலாம்.

இந்த இடத்தில் குறிப்பிடவேண்டிய இன்னொரு முக்கியமான விசயம் ஒன்று உள்ளது. அது ஆண்மைக் குறைவு.


www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

என்னைச் சந்திக்கும் பல ஆண்கள் தனக்கு ஆண்மைக் குறைவு இருக்கிறதென்று கவலைப்படுகிறார்கள். பெண்களில் பலர் தங்கள் கணவருக்கு ஆண்மைக் குறைவு உள்ளது. அதை குணப்படுவத்துவதற்கு என்ன வழி என்று என்னிடம் கேட்கிறார்கள். ஒரு சத்தியமான உண்மை என்னவெனில் ஆண்மைக்குறைவு என்ற நோய் உலகத்தில் இல்லவே இல்லை.

ஒரு பெண் ஆரோக்கியமாகவும் உயிர்சக்தி மிகுந்தவராகவும் இருக்கும் பொழுது அவர் அருகே வரும் கணவர் நான்கு நாட்கள் போதிய உறக்கமின்றியும், உடல் சோர்வுடனும், சாப்பிடாமல் இருந்து அவரை நெருங்கினாலும் உடனே அவருடலுக்குள் பிராணசக்தி பாயும். அவரால் முழு ஆண்மையுடன் உடனடியாக செயல்படமுடியும். இந்நிலையில் ஒரு ஆணுக்கு பிராணசக்தி கிடைக்கவில்லை எனில் அந்தப் பெண் தான் பொறுப்பேற்க வேண்டும். பெண்ணிடம் பிராணசக்தி குறைந்து விடுமானால் அவரிடம் நெருக்கும் கணவருடைய உடலில் இருந்து பிராணசக்தியை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொள்கிறார். ஒரு கட்டத்தில் முற்றிலும் இழந்து எதுவும் செய்ய முடியாதவராக ஆகிவிடுகிறார். ஆனால் வெளியுலகிற்கு தவறாக வேறு செய்தி சொல்லப்படுகிறது.

உண்மையில் இது சக்தி சம்பந்தப்பட்ட விசயம். இது பெண்களுக்கு பொருந்தும். எனவே பிராணன் என்பது பற்றியும் சக்தி என்பது பற்றியும் நன்றாகப் புரிந்து கொள்ள முயற்சிப்போம். இதை அறிந்து கொள்ள அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சையைக் கடைபிடியுங்கள்.

ஆண்மைக்குறைவுக்கு முழுவதுமாக பெண்கள் தான் காரணம் என்று முடிவெடுத்து விடக்கூடாது. ஆண்கள் செய்யும் தவறான செயல்களும், போதைப்பழக்கங்களும் காரணமாக இருக்கலாம். அதே சமயம் எந்த கெட்ட பழக்கமும் இல்லாத கணவனின் உடலில் இந்த குறைதோன்றுகின்றதெனில் அதற்கு பெண்தான் பொறுப்பு. ஏனெனில் மனைவியிடம் உயர்சக்தி குறைவாகவோ, இல்லாமலோ இருக்கும் பட்சத்தில் கணவனிடம் இருந்து சக்தியை வாங்கும் நிலையில் அவர் இருக்கிறார். இவ்வாறு கணவனிடம் இருந்து உயிர்சக்தியை தொடர்ந்து உறிஞ்சிக் கொண்டே இருக்கும் பொழுது இரண்டாண்டுகளில் முற்றிலும் தீர்ந்து கணவர் ஆண்மைகுறைவு உள்ளவராகி விடுகிறார்.

எனவே கணவன், மனைவி இருவரில் யாருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டாலும் அதை சரிசெய்வதை இருவரும் தங்களின் கடமையாகக் கொண்டு பிராணசக்தியை உடலில் அதிகரித்துக் கொள்ளவேண்டுமே ஒழிய ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து சென்றுவிடக் கூடாது. இது தொடர்பாக விளக்கமான நூல் ஒன்றை வெளியிட உள்ளோம். அதுவரை மேலே கூறியவற்றை கவனமாகப் புரிந்துகொண்டு செயல்படுத்தி வாருங்கள்.

இல்லறம் என்பது கணவன், மனைவியின் அன்பில் பரிணமிப்பது. கணவன், மனைவியின் உயிர்சக்தியே அதில் ஜீவநாடியாக விளங்குகிறது. யாரிடம் மிகுந்திருக்கிறதோ குறைந்தவருக்குக் கொடுக்கும் பொழுது சக்திப் பரிமாற்றம் சமன்படுத்தப்படுகிறது. ஒன்றோடு ஒன்று கலக்கும் உயிர்சக்தி முழுமையடைகிறது. முழுமையான சக்தி ஆரோக்கியம் அளிக்கும் சக்தி.

உயிரே! உயிரே! வந்து என்னோடு கலந்துவிடு!
எங்கள் இருவருக்குள்ளும்
உயிர்சக்தியை பரிமாற்றிவிடு !!!

வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் !!



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

# அவள் இல்லாத பொழுது அவல் இருந்தால் எவனும் தேவையில்லை.

- ஹீலர் பாஸ்கர்

சமையல் செய்வது என்பது ஒரு கலை. கைமணத்துடன் நாவுக்குச் சுவையான உணவுகளைத் தயாரித்து அனைவருக்கும் பரிமாறும் பொழுது ஏற்படும் ஆனந்தம் இருக்கின்றதே அது வார்த்தைகளில் விவரிக்கமுடியாதது. விருந்தோம்பல் நம் பண்பாட்டின் அடையாளம், விருந்தினர்களுக்கு விதவிதமான சுவையான உணவுவகைகளைச் சமைத்துப் பரிமாறும் வழக்கம் நம்முடையது. ஆனால் நமக்காக கூட இன்று நாம் சமைப்பதில்லை அந்த இடத்தை இன்று ஹோட்டல் உணவுகள் ஆக்கிரமித்து விட்டன.

அந்தக் காலத்தில் பெண்கள் சமையற்கலையில் சிறந்து விளங்கினர். இன்றைய நாகரிக காலகட்டத்தில் பெண்கள் சமையல் செய்வது என்பதே அபூர்வமாகிவிட்டது. ஹோட்டல் உணவுகளை விரும்பி உண்ண ஆரம்பித்திருக்கும் இந்தக்காலகட்டத்தில் பெரும்பாலும் வீடுகளில் சமையல் செய்வது குறைந்துவிட்டது. நிறையப் பெண்களுக்கு சமையல் செய்யவே தெரியாது என்பது வேறு விசயம். அதைச் சொல்லிக் கொள்வதில் அவர்களுக்குப் பெருமை வேறு.

ஆனால் நம்மூர் பரவாயில்லை என்று சொல்லும் அளவிற்கு பல வெளிநாடுகளிலும் மூன்று வேளையும் ஹோட்டல் உணவையே உண்கிறார்கள். அவர்கள் சமைப்பதே இல்லை. போகட்டும். நாம் நம்முடைய விவகாரத்திற்கு வருவோம்.

ஹோட்டல் உணவை விடவும், நாமே சமைத்து உண்பது தான் உடல் நலத்திற்கு ஆரோக்கியம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் ஏன் நாம் அதற்கு முக்கியத்துவம் தருவதில்லை?

நான் ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களுக்கு இப்பொழுது வயது அறுபது என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த அறுபது ஆண்டுகளில் சமைத்த உணவு வகைகளை சாப்பாடு, குழம்பு, ரசம், பொரியல், துவையல், அப்பளம், பாயசம், பூரி, வடை, போண்டா என எண்ணற்ற பதார்த்தங்களை ஒரு கை பார்த்திருப்பீர்கள். இதில் எந்த ஒன்றையாவது உங்களுக்கு சமைக்கத் தெரியுமா, ரசம் வைப்பது, அப்பளம் பொறிப்பது, அவ்வளவு ஏன் சுடு நீரை வைக்கக்கூட எவருக்கும் தெரியாது. நான் இது வரை சமையலறைப் பக்கமே சென்றதில்லை. சமைத்துக் கொடுத்தால் சாப்பிடுவேன் என்று கூறுவோர்களே அதிகம்.

இந்த அறுபது ஆண்டுகால வாழ்வில் வித விதமான உணவுகளை உண்ணத் தெரிந்த நமக்கு அதை சமைப்பது எப்படி என்று தெரியவில்லை. சாம்பார் எப்படி வைப்பது? தெரியாது. அன்றாடம் அவரவர் வீடுகளில் சமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். என்றாவது சமைக்கும் பொழுது என்னென்ன எப்படி செய்கிறார்கள் என்று கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடன் சென்று பார்த்ததுண்டா? ஏன் ஒருமுறை சென்று பார்த்தால் தான் என்ன?

சில ஆண்கள் நினைக்கக் கூடும். ஆண்களாகிய நீங்கள் சமைக்கத் தெரியாமல் இருக்கிறீர்களே என்று எங்களைப் பார்த்துப் கேட்கிறீர்களே, பெண்களே இன்று சமைக்கத் தெரியாமல் இருக்கிறார்களே என்று நீங்கள் கேட்கலாம். உண்மை தான். ஆனால் பொதுவான உண்மை என்ன தெரியுமா?

உலகில் ஒரு மனிதன் வாழ்வதற்கு அத்தியாவசியமான சில விசயங்களை கண்டிப்பாக கற்றுக் கொண்டிருக்க வேண்டும். சமையல் என்பது மிகமிக முக்கியமான ஒன்று. எனவே யாராக இருந்தாலும் எத்தனை வயதாகி இருந்தாலும் சமைக்கத் தெரியவில்லை என்றால் அவர் இன்றைக்கே சமையல் கற்றுக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். ஆறு மாதங்களில் நீங்கள் சமையலில் ஓரளவு கற்றுக் கொள்வீர்கள்.

யாரும் உதவிக்கு இல்லாத சமயத்திலும் உங்களுக்காக நீங்களே சாப்பாடும் , ரசமும் அல்லது உப்புமா, சப்பாத்தி போன்ற உணவுவகைகள் ஏதாவது தயார் செய்து கொள்வீர்கள்.

சமையல் செய்யவே தெரியாதவர் களுக்காக நாம் இப்பொழுது சமைக்காமல் எளிதில் தயார் செய்துவிடக்கூடிய உணவு ஒன்றைப்பற்றிய செய்முறையை கூறுகிறோம்.

அவல் என்று ஒரு சிறப்பான ஒரு உணவு வகை. இது சாதாரணமாக எல்லா கடைகளிலும் கிடைக்கும். அவல் என்பது ஒரு வகையில் முளை கட்டிய நெல்லில் தயாரிக்கப்படுவது என்று சொல்லலாம். நெல்லே அவலாக மாற்றப்பட்டு வந்தது. முன்பு இதுதான் நடைமுறையாக இருந்தது. ஆனால் இன்றைக்கு பெரும்பாலும் இந்த முறையில் அவல் தயாரிக்கப்படுவதில்லை. பச்சரியை அழுத்தித்தான் அவலாக்கப்படுகிறது. பாரம்பரியமாக அவல் தயாரிப்பதற்கு என்று இருந்த வழி முறைகளை இன்று கடைபிடிப்பதில்லை. இருப்பினும் அவல் உணவினை எவ்வாறு தயாரிப்பது என்று ஒவ்வொரும் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

அவல் எப்பொழுதும் எல்லா வீடுகளிலும் இருப்பு இருந்து கொண்டிருக்க வேண்டும். இந்த உணவுதான் தயாரிப்பதற்கே மிக எளியதும் கூட. அவலைத் தண்ணீரில் சிறிது நேரம் ஊறவைத்து விட்டு இனிப்பு அவலாக அல்லது காரம் சேர்த்து கார அவலாக சாப்பிடலாம். அவலை தாளித்தும் உண்ணலாம். இவ்வாறு பல வகைகளை அவலில் செய்யலாம்.

ஒரு சமயம் நான் வெளியூரில் நிகழ்ச்சி நடத்துவதற்காக சென்று கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் ஒரு பெண்மணி. அவர் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு “நாளை எங்கள் வீட்டிற்கு வரப்போகிறீர்கள் உங்களுக்கு எந்த மாதிரி வகை உணவுகள் பிடிக்கும்? சொல்லுங்கள் நான் தயார் செய்து வைக்கிறேன்''. என்று ஆவலுடன் கேட்டார். பொதுவாக நான் யாருக்கும் சிரமம் கொடுக்கக் கூடாது என எண்ணுபவன். எனவே எளிய உணவாக சொல்லலாம் என நினைத்து “எலுமிச்சை பழ சாதம் செய்து விடுங்கள்” என்று கூறினேன். எதிர் முனையில் அவர்கள் “எலுமிச்சை சாதமா”? செய்துவிடுகிறேன். என்று ஏதோ தயக்கத்துடன் கூறி வைத்துவிட்டார்கள்.

ஒரு அரைமணி நேரம் கடந்திருக்கும் காரில் என்னோடு பயணித்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணியைத் தொடர்பு கொண்டு அவரிடம் என்னவோ கேட்டுக் கொண்டு இருந்தார். எலுமிச்சை சாதம் என்றும் எப்படி செய்வது என்றும் அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை வைத்து ''ஏதோ நம் சம்பந்தமாக ஏதோ பேசுகிறீர்களோ என்ன அது?” என்று கேட்டேன்.

“எலுமிச்சை சாதம் தயார் செய்ய சொல்லி இருந்தீர்களாம் அதை செய்வது சிரமமாக இருக்கும் என்றும் அதை விட எளிமையாக செய்யக் கூடிய உணவு ஏதாவது கூறமுடியுமா? என்று என்னைச் கேட்கச் சொன்னார்கள். ''நேரடியாக உங்களிடம் இதுபற்றிப் பேச அவர்களுக்கு கூச்சமாக உள்ளது என்று என்னைத் தொடர்பு கொண்டார்கள்” என்று அவர் சொல்லி முடித்தார்.

உடனே அந்தப் பெண்மணிக்கு போனில் தொடர்பு கொண்டு பேசினேன். நீங்கள் ஆணியே பிடுங்க வேண்டாம். என்பதைப் போல “நீங்கள் சமைக்கவே வேண்டாம் நானே வருகிறேன்”. என்று கூறினேன்.



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

பின்னர் அவர்கள் வீட்டிற்குச் சென்று எலுமிச்சை சாதம் எப்படி செய்வது ? என்பதை நானே சமையல் செய்து காண்பித்தேன். சமையல் செய்து அவர்களையும் சாப்பிடச் சொல்லி நானும் சாப்பிட்டுவிட்டு வந்தேன். இது நடந்து ஆறுமாதங்கள் கழித்து ஒருநாள் அந்தப் பெண்மணி எனக்கு போன் செய்தார். "நீங்கள் வந்துவிட்டு சென்ற இந்த ஆறு மாதத்தில் நான்கு முறை எலுமிச்சை சாதம் செய்து மற்றவர்களுக்கு சாப்பிடக் கொடுத்தேன். நானும் சாப்பிட்டேன் என்று பெருமை பொங்கக் கூறினார். இன்று காலம் இவ்வாறு தான் ஓடிக் கொண்டிருக்கிறது. முதலில் ஆண்களுக்குத் தான் சமைக்கத் தெரியாதநிலை இருந்தது. இன்று பெண்களுக்கும் சமைக்கத் தெரியாது என்ற நிலை வந்துவிட்டதால் இனிமேல் நாம் எங்குதான் செல்வது?

ஆண்கள், பெண்கள் அனைவரும் சமைக்கக் கற்றுச் கொள்ளவேண்டும். யாராவது சமைத்துத் தருவார்கள் என்று எதிர்பார்ப் பதைவிடவும் ஹோட்டல் உணவுகளை நாடிச் செல்வதை விடவும் இது சிறந்த வழி அல்லவா ?

அவல் உணவைத் தயாரிக்க முதலில் கற்றுக் கொள்வோம். **இதில் கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை. அவ்வளவு எளிமையானது.** பிறகு ஆறு மாதம் அல்லது ஒரு வருட காலத்தில் சமையல் செய்ய சிறிது சிறிதுதாக கற்றுக் கொண்டு விட்டால் அதிலும் நமக்கு நிபுணத்துவம் வந்துவிடும்.

அவள் இல்லாத பொழுது அவல் செய்வது மட்டுமல்லாமல் அனைத்து சமையல் வகைகளையும் செய்து அசத்துவோம்.

ஆண், பெண் பேதமின்றி அனைவரும் சமைக்கக் கற்றுகொள்வது, ஒவ்வொரு தனிமனிதனும் தன் தேவைகளுக்காக அவசியமாக தெரிந்து கொள்ளவேண்டியவற்றில் ஒன்று என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

## பொற்காலம்



**கடந்து கொண்டே இருக்கிறது காலம்.**
**விடியலைப் புதிதாய் தந்துகொண்டிருக்கிறது நாளும்...**
**சாதிக்க எண்ணங்கள் உதயமாகும்!**
**செயலில் வடித்தால் அது வெற்றி காணும் !**
**நேரமில்லை என்று சொல்வதிலேயே நம் நேரம் கடக்கும் !**
**ஆனால் யாருக்காகவும் காத்திருப்பதில்லை எந்த கணமும் !**
**பயனற்ற செல்லாத நாணயம் கடந்தகாலம் !**
**நிகழ்த்த வேண்டிய சாதனைகளுக்கானது நிகழ்காலம் !**
**நேரத்தை வீணாக்கினால் என்னவாகும் எதிர்காலம் ?**
**காலம் ஆறுபோல் தன் போக்கில் போகும்.**
**கருத்தாக பயன்படுத்திக்கொண்டால் நம் கப்பலும் அதில் ஓடும்.**
**ஒவ்வொரு நொடிகளின் தொகுப்பு தான் காலம் !**
**அந்தத் தொகுப்பினை ஆளத் தெரிந்தார்க்கு என்றுமே**

**பொற்காலம் !**

**சுகுமார்**
பொள்ளாச்சி

# நம்ம ஊரு வண்டி...



**வா**கனப் போக்குவரத்து மிகுந்துவிட்ட காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாகனங்கள் எவ்வளவு பெருகி இருக்கிறதோ அந்தளவிற்கு விபத்துகளும் மிகுந்து விட்டது என்பதை இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். இவ்வளவு விபத்துகள் அன்றாடம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றதெனில் அதற்கு காரணமும் இருக்கும் அல்லவா? கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல், போதைப் பழக்கம், சீர்கேடான சாலைகள், மிகவேகமாக வாகனங்களை இயக்குதல் என்று எண்ணற்ற காரணங்கள் இருந்தாலும் வித்தியாசமான, மிக முக்கியமான காரணம் ஒன்றை நாம் கவனிக்க வேண்டி உள்ளது.

அது என்ன காரணம் எனில்...

நமது எண்ணங்கள் தான் காரணம் ஆம்! நமது எண்ணங்களும் வாகன விபத்துகள் ஏற்படுவதற்கு ஒரு காரணமாய் இருக்கிற தென்பதை யாரும் இதுவரை சிந்தித்து பார்ப்பதே இல்லை.

கார், பஸ் நேருக்கு நேர் மோதல் கோத்தகிரி, குன்னூர் போன்ற மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த சுற்றுலா வாகனம் ஒன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளானது. இரண்டு சக்கர வாகனத்தின் மீது லாரி மோதியது. ஆட்களை ஏற்றிச் சென்ற டெம்போ பள்ளத்தில் உருண்டு ஆட்கள் படுகாயமடைந்தனர். இப்படி நிறைய விபத்துகளை நாம் கேள்விப்படுகிறோம். இதற்கு வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு, எதிரில் வந்தவர் சரியாக வாகனம் ஓட்டி வராததால் விபத்து நிகழ்ந்தது. வாகனத்தில் இயந்திரக் கோளாறு காரணமாக பிரேக் பிடிக்காமல் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துகுள்ளானது. சாலையில் உள்ள ஏதோ ஒன்றினால் அல்லது சாலை சரியாக இல்லாததால் விபத்து நிகழ்ந்துவிட்டது என பற்பலக் காரணங்களை கூறக் கேட்டிருக்கலாம்.

பொதுவாக மக்கள் அதிகம் பயணிக்கும் வாகனம் விபத்துக்குள்ளாகிறது என்றால் அதற்குக் காரணம் மக்களின் எண்ணமே. உதாரணமாக ஒரு வாகனத்தில் பயணிக்கும் பொழுது அதன் ஓட்டுநர் பொறுப்பாக நிதானமாக வாகனத்தைச் செலுத்துவார். அதில் பயணிப்பவர்களுக்கும் ஒரு பாதுகாப்பான உணர்வு இருக்கும். சில வாகனங்களில் பயணிக்கும் பொழுது ஒருவித அச்ச உணர்வு ஏற்படும். அந்த வாகனத்தில் ஓட்டுநர் வாகனத்தை இப்படியும் அப்படியுமாக வளைத்தும் திடீரென பிரேக் பிடித்தும் திடீரென வேக மெடுத்தும் வண்டியை ஓட்டிக் கொண்டிருப்பார். அந்த வாகனத்தில் பயணிப்பவர்கள் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என நினைக்கும் அளவிற்கு பீதியுடன் அமர்ந்திருப்பர். என்ன இவ்வளவு வேகமாக வண்டியை ஓட்டுகிறாரே எங்காவது கொண்டு போய் இடித்துவிடுவாரோ, எதிரே வரும் வாகனத்தில் மோதிவிடுவாரோ என நினைத்து ஒருவித பய உணர்வுடன் பயணம் செய்வர்.இந்த எண்ணம் அந்த வாகனத்தில் பயணிக்கும் அனைவருக்கும் ஏற்பட்டுவிடும் பொழுது, அது பேருந்தோ காரோ அல்லது ஏதேனும் சுற்றுலா வாகனம் என்று எதுவாக இருப்பினும் அதன் ஓட்டுநரையும் மீறி விபத்து நடந்துவிடுகிறது. பயணிகளின் அச்ச உணர்வான விபத்து நேர்ந்துவிடுமோ என எண்ணுவது அதிர்வலைகளாய் சென்று ஓட்டுநரைப் பாதிக்கிறது. எனவே ஓட்டுநர் தன்னையும் மீறி விபத்தினை ஏற்படுத்திவிடுகிறார்.

எண்ணங்கள் தான் உலகை ஆண்டு கொண்டிருக்கிறது. மக்களின் நல்வாழ்வும் எண்ணத்தில் தான் அடங்கியிருக்கிறது. மக்கள்

பாதிக்கப்படுவது அதே எண்ணத்தால் தான் நடக்கிறது. மக்களின் வாழ்வும், தாழ்வும் அவரவர் எண்ணங்களினால் தான் ஏற்படுகிறது.

கத்தியை த் தீட்டாதே, புத்தியைத் தீட்டு என்று சொல்லி வைத்தார்கள். உலகில் எவ்வளவு பெரிய விசயத்தைச் சாதிக்க வேண்டும் என்றாலும் கத்தியைத் தீட்டவேண்டியதில்லை. புத்தியினால் நன்கு ஆற அமர யோசித்து திட்டமிட்டாலே போதும் வெற்றி பெற்றுவிடலாம் என்பதை நிறையப்பேர் சாதித்துக் காட்டி உள்ளனர். அவர்களைப் போல் நாமும் புத்தியைப் பயன்படுத்தி வெற்றியாளர்களாய் வலம் வருவோம்.

ஒரு உதாரணம் பார்ப்போம்.

மலேசியாவில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று தில்குமார் என்று பெரிய பணக்காரர் ஒருவர் வாழ்ந்துவந்தார். நிறைய வியாபாரங்களில் ஈடுபட்டு பொருள் ஈட்டிவந்தார். தன் காரில் பயணிக்கும் பொழுதெல்லாம் எங்கே தனக்கு விபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அவருக்கு இருந்து வந்திருக்கிறது. எனவே அதற்காக மெர்சிடிஸ் பென்ஸ் எனும் விலை உயர்ந்த காரை வாங்கி இருக்கிறார். அந்தக் காரை தான் வாங்கியது ஏன்? என்று தனக்குத் தெரிந்தவர்களிடம் எல்லாம் விளக்கம் கூறி பெருமைப்பட்டுக் கொள்வார். அந்தக் காரை அவர் வாங்கியதன் காரணம் அந்தக் கார் எதன் மீது மோதிவிட்டாலும் காருக்கு ஒன்றும் ஆகாது. மிகவும் கனமாகவும், உறுதியாகவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. என்ஜின் உறுதியும், கனமும் கொண்டது. லாரியில் சென்று இடித்துவிட்டாலும் லாரிதான் உடையும். இந்தக் காருக்குப் பாதிப்பு நேராது. அவ்வளவு பாதுகாப்பான கார் என்று அடிக்கடி கூறிவந்திருக்கிறார். அவருக்குத் தெரிந்தவர்கள் அனைவரும் இந்த விசயத்தைக் கேட்டிருக்கின்றனர். ஆனால் அவர் இறந்தது ஒரு கார் விபத்தில் .



காரணம்?

ஒருநாள் அந்த செல்வந்தர் தன் இரு மகன்கள் மற்றும் ஒரு வேலைக்காரப் பெண்மணியுடன் மொத்தம் நான்கு பேர் பயணம் செய்துள்ளனர். அன்று மெர்சிடிஸ் பென்ஸ் காருக்குப் பதிலாக வேறுகாரில் அவர்கள் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுதே அந்த செல்வந்தருக்கு உள்ளூர பயம் தொற்றிக் கொண்டது. ஏனெனில் காரை ஓட்டிக் கொண்டிருந்தது அவர் மகன்களில் ஒருவர். அவனுக்கு சரியாக வண்டி ஓட்டத் தெரியாமல் வேகமாக ஓட்டிக்கொண்டிருக்கிறானே என்றும் எதன் மீதாவது இடித்து அனைவரும் சாகப் போகிறோம். தவிர இது மெர்சிடிஸ் பென்ஸ் காராக இருந்தால் பாதுகாப்பாக இருந்திருக்கும் அதற்கும் வழியில்லை என்று மனதில் தொடர்ந்து எண்ணிக் கொண்டே சென்றிருக் கிறார். அவரது எண்ணத்திற்கு வலிமை அதிகமாக இருந்ததினால் அந்தக்கார் சென்று ஒரு லாரியில் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த நான்கு பேரில் அந்த வேலைக்காரப் பெண்மணி தவிர மற்ற மூவரும் இறந்து விட்டனர்.

இவ்வாறு விபத்து ஏற்படுவதற்குப் பெரும்பாலும் அதில் பயணம் செய்பவர்களே காரணமாகி விடுகின்றனர்.

நம்மூர்களிலும் வாகனம் ஓட்டுபவர்கள் வேகமாக வண்டி ஓட்டும் பொழுது அதில் பயணிப்பவர்கள் எல்லா கடவுளையும் வேண்டிக் கொள்கின்றனர். ஆட்டோ, கார், பஸ் என்று எதில் பயணித்தாலும் அவர்களின் கவலை இதுவாகத்தான் இருக்கும். இப்படி வண்டியை ஓட்டுகிறானே எங்காவது மோதிவிடுமோ என்ற பயத்துடன் பயணம் செய்பவர்கள். சிலர் வாய்விட்டே சொல்லி விடுவார்கள். தங்களுக்கு எதிர்வரும் வாகனம் அதிவேகமாக கடந்து


www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

சென்றால் நிறையப்பேர் சொல்வார்கள். “சாகிறதுக்கா அவ்வளவு வேகமாகப் போற?” என்று திட்டுவார்கள். ரோட்டில் போவோர் வருவோருக்கு இடையூறு செய்யும் வண்ணம் வாகனம் ஓட்டினலே “எப்படிப்போறான் பாரு எங்காவது போய் மோதிசாகப் போகிறான்” என்ற வசவுகளை அவர்கள் சொல்லிச் செல்வார்கள். இவ்வாறு ஒரே நேரத்தில் பலவித மனிதர்களும் விபத்து என்பதைப் பற்றி சிந்திக்கும் பொழுது அந்த இடத்தில் விபத்து ஏற்பட்டுவிடுகிறது.

எனவே மினிபஸ், பஸ், கார், லாரி, வேன், ஆட்டோ போன்ற எந்த வாகனத்தை ஓட்டக் கூடியவர்களாக இருந்தாலும் அவர்கள் தங்கள் வாகனம் மட்டுமின்றி சாலையில் பயணிக்கும் மற்ற வாகனங்கள், பிற பயணிகள், நடந்து செல்வோர் போன்றவர்களின் மீதும் அக்கறை கொண்டு வாகனத்தை கவனமாக ஓட்டவேண்டும். ஏனெனில் தங்கள் உயிரும் மற்றவர்களின் உயிரும் விலைமதிப்பற்றது என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். வாகன விபத்துகள் அதிகரித்துவரும் இந்தக் காலகட்டத்தில் அனைவரும் இதைப் புரிந்து கொண்டு பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள வேண்டும். தன்னை நம்பிப் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை ஒவ்வொரு வாகன ஓட்டிகளும் உறுதி செய்யவேண்டும்.

இந்தக் கட்டுரையைப் படிக்கும் பொதுமக்கள் தங்கள் பார்வையில் யாராவது பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டும் நபர் தென்படுவார் எனில் அவரிடம் பொறுப்பான முறையில் பாதுகாப்பான பயணம் மேற்கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை அவருக்கு எடுத்துக் கூறி புரியவையுங்கள்.

நான் எனக்குத் தெரிந்த நல்ல விசயங்களை பொதுமக்களுக்கு எப்படி வெளிப்படுத்தி அவர்களுக்கு உதவுகிறேனோ அதேபோல நீங்களும் இதைப் போன்ற நல்ல விசயங்களை அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இது ஒருவேலையா? இதைச் சொன்னால் யாராவது கேட்பார்களா என்று எண்ணாமல் அனைவரும் ஒரு நல்ல விசயத்தை மக்களிடம் பரப்ப முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம்மிடம் உள்ள குறைபாடு என்னவென்றால் ஒன்று நாமும் நல்ல விசயங்களை பின்பற்றாமல் இருப்பது. மற்றொன்று நமக்குத் தெரிந்தாலும் மற்றவர்களுக்கு அதை வெளிப்படுத்துவதில் தயக்கம். எனவே மற்றவர்களுக்கு அது சென்று சேராமல் போய்விடுகிறது. இனிமேல் இந்த நிலை மாற வேண்டும். மக்கள் நல்ல விசயங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். நாம் தான் அவர்கள் புரியுமாறு சொல்ல வேண்டும். எதையும் சொல்லும் விதத்தில் சொன்னால் புரியும். நாமே சிலவற்றை முடிவு செய்து வைத்துக் கொண்டு நாமெல்லாம் சொன்னால் அவர்களுக்குப் புரியாது என்று நினைக்கிறோம். இவ்வாறு நினைத்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாக அவர்களுக்குப் புரியாது. எப்படியும் நாம் அவர்களுக்குப் புரிய வைத்துவிட வேண்டும் என்ற வைராக்கியத்துடன் சொல்லும் பொழுது அவர்களுக்குப் புரிந்துவிடும்.

எனக்குத் தெரிந்த குருநாதர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு மகள் இருக்கிறார். அவருக்கு மருத்துவம் பற்றிய அனுபவம் இருப்பதினால் அவரை நாடி சிகிச்சை பெற நிறையப் பேர் வந்து செல்வர். நோயாளிகளுக்கு சில அறிவுரைகளைக் கூறி “அதை அதனுடன் சேர்த்துச் சாப்பிடு. அப்படி செய், இப்படி செய்” எனக் கூறி அனுப்பி வைப்பார். சில நாட்கள் கழித்து அவரிடம் வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டவர். குணமடையவில்லை என்று கூறினால் உடனே பதிலுக்கு கோபப்பட்டு கூறுவார். “நீங்கள் நான் சொல்வதை சரியாகக் கடைபிடிக்கவில்லை. நீங்கள் சரியாக அன்று கவனித்துக் கேட்டுக் கொள்ளவில்லை. எனவே நான் மீண்டும் மீண்டும் கூறமாட்டேன்” என்று கூறி அனுப்பிவிடுவார். எவருக்கும் ஒருமுறை மட்டும் தான் கூறுவார். மீண்டும் கூறமாட்டார்.

நான் ஒரு முறை அவர் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் அந்த குருநாதர் தன் மகளுக்கு ஏதோ அறிவுரை கூறிப் பேசிக் கொண்டு இருந்தார். "ஏம்மா" நான் ஆயிரம் முறையாவது உனக்குக் கூறியிருப்பேன். நீ ஏன் அதை சரிசெய்து கொள்ளாமல் இருக்கிறாய்? இப்பொழுதாவது சரிசெய்து கொள்ளக்கூடாதா?" என அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது நான் அந்த குருநாதரைப் பார்த்துக் கேட்டேன். "உங்கள் மகள் என்பதற்காக ஆயிரம் முறை கூறியும் கேட்கவில்லை என்பதற்காக ஆயிரத்து ஓராவது முறை கூறுகிறீர்களே உங்களைப் பார்க்க வருபவர்களிடம் மட்டும் ஏன் ஒருமுறைக்கு மேல் புரியவில்லை எனக் கேட்டால் சொல்லாமல் அவர்கள் மீது கோபப்பட்டு பேசி அனுப்பிவிடுகிறீர்களே ஏன்? என்றேன். அதற்கு அவர் ஒன்றும் கூறவில்லை. நானே அதற்கான காரணம் கூறினேன். "மற்றவர்களை நீங்கள் யாரோ என்று எண்ணுகிறீர்கள். உங்களுடைய மகளுக்கு மட்டும் அக்கறையோடு புரியவைக்க நினைக்கிறீர்கள். உலகில் உள்ள அனைவரும் நம் சகோதர, சகோதரிகள் நம் தாய் தந்தையரைப் போன்றவர்கள் என்று நினைக்கும் பொழுது நம்மால் ஒருமுறை அல்ல ஆயிரம் முறை கூறினாலும் அவர்களுக்குப் புரியவைத்துவிடவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கும். கோபம் வராது".

எனவே நம்முடைய சமுதாயத்தைத் திருத்த வேண்டியது நமது கடமை. அனைவரும் நம்முடைய உறவினர்களே நான் ஒருவன் மட்டுமே இந்த விசயத்தைக் கூறிக் கொண்டிருந்தால் போதாது. நீங்களும் அந்த அந்தப் பகுதிகளில் நல்ல விசயங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். உலக மக்களுக்கு நன்மைகளை எடுத்துச் செல்ல (சொல்ல) வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

யாரெல்லாம் மூக்குப்பிடிக்க சாப்பிட்டுவிட்டு தன்குடும்பம், தன் பிள்ளைகள், தன் தந்தை, தாய் நன்றாக இருந்தால் போதும். அவர்களுக்கு மட்டும் சொத்து சேர்த்து வைத்துவிட்டு கார், பங்களா என்று சந்ததிகள் நன்றாக வாழும் அளவிற்கு பொருள் சேர்த்தாகிவிட்டது. இனி நிம்மதியாக செத்துப்போவேன் என்று கருதுகிறார்களோ அவர்களெல்லாம் விரைவில் செத்துப் போய்விடுவார்கள். அவர்களால் சமுதாயத்திற்கு எந்த பயனும் இல்லை.

24 மணி நேரத்தில் குறைந்த பட்சம் ஒருமணி நேரமாவது நாம் சார்ந்திருக்கும் இந்த சமுதாயத்திற்காக ஏதாவது நல்ல காரியம் செய்ய வேண்டும். 24 மணிநேரமும் நம் குடும்பம், நம் வாழ்வு, எப்படி பணம் சம்பாதிப்பது என்று ஓடிக்கொண்டிருந்தால் இந்த சமுதாயத்தை யார் பார்ப்பது? பிறகு இந்த நாடே கெட்டு குட்டிச் சுவராகிவிட்டது என்றும் சமுதாயம் கெட்டுவிட்டது என்றும் புலம்பி என்ன பயன்? டீக்கடை பெஞ்சுகளில் உட்கார்ந்து கொண்டு வெட்டியாக எதையாவது பேசிக்கொண்டு இருப்பவர்களால் என்ன நன்மை கிடைத்துவிடப்போகிறது? பேசுவதற்கு இங்கே ஆட்கள் தேவையில்லை. செயல் புரிவதற்கு தான் இங்கே ஆட்கள் தேவை. வீணாக பேசிக்கொண்டு பொழுதைக் கழிக்காமல் களத்தில் இறங்குங்கள். செயல்வீரர்களாக செயல்படுங்கள்.

வெறுமனே வாயடித்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு இனி செயலில் இறங்குவோம். நமது எண்ணத்தினால் இந்த உலகை மாற்றுவோம். இனிமேல் நமக்கு என்ன மாதிரி வாழ்க்கை வேண்டுமோ அதைத் திரும்ப திரும்ப நினைத்துப்பார்ப்போம். நாம் ஒரு விசயத்தைப் புரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் அதைப் புரியவைப்போம். நாம் நிம்மதியாக வாழ்ந்து மற்றவர்களையும் நிம்மதியாக வாழ வைப்போம்.

நம்ம ஊரு வண்டிகளை பாதுகாப்பு வண்டிகளாக மாற்றுவது நமது கடமை. என உணர்ந்து கொண்டு செயல்படுவோம்

வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் !!



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com



# வாக்காளப் பெருமக்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு...

- ஹீலர் பாஸ்கர்

நாடுமுழுவதும் பாராளுமன்றத் தேர்தலுக்கான பணிகள் வேகவேகமாக நடந்துவருகின்றன. இந்த 2014ல் அரசியலில் புதிய மாற்றங்கள் நிகழ்ந்து மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற தங்கள் கட்சிக்கே வாக்களிக்கவேண்டும் என்று எல்லா சந்து பொந்துகளிலும், பொதுமேடைகளிலும் அரசியல் கட்சிகள் முழங்கிவருவதை தற்பொழுது அன்றாடம் பார்த்து வருகிறோம். இந்த மாத இறுதிக்குள் அத்தனை பரப்புரைகளும், பரபரப்பும் நிறைவடைந்து அடுத்து புதிய பிரதமர் இந்தியாவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார். இதையெல்லாம் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடியதுதான். ஆனால் இந்த அரசியல் கட்சிகள் மக்களுக்கு (இனிமேல் தான்) சேவை செய்யப்போவதாகவும், அதனால் மக்கள் வாழ்வில் வளம்பெற்றுவிடுவார்கள் என்று வழக்கமாக சொல்லும் அவர்களின் வாக்குறுதிகளை நம்புவதைப்போல் இந்த முறையும் நம்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உலகமே இதுவரை அறியாத உண்மையை நாம் விளக்கமாக சொல்லப் போகிறோம். உங்களுக்கு பெரும் அதிர்ச்சி தருவதாக அந்த உண்மை இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. நடக்க இருக்கும் நம் பாராளுமன்ற தேர்தல் என்றில்லை ஒவ்வொரு நாட்டின் தலைவரை தேர்ந்தெடுப்பது முதல் சமீபத்தில் மாயமான மலேசிய விமானம் உட்பட உலகின் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு 13 நபர்களால் தீர்மானம் செய்து நடத்தப்படுகிறது. உங்களுக்கு ஆச்சர்யம் ஏற்படலாம். இத்தனை கோடி மக்களும் எப்படி அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்க முடியும்? 13 பேரால் இவ்வளவும் செய்யமுடியுமா? அப்படியென்றால் அவர்கள் யார்? இவற்றையெல்லாம் நாம் அறிந்து கொண்டு பின்னர் யாருக்கு வாக்களிக்கலாம் அல்லது வாக்களிக்கலாமா? வேண்டாமா? எத்தகைய மாற்றம் நமக்குத் தேவை? என்பதை சிந்தித்து முடிவு செய்யுங்கள்.

நம்முடைய பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது நாம் பார்க்கப்போகும் இந்த உலக அரசியலைப் பற்றியும் விரிவாக நான் பேசிய ஐந்து மணிநேர ஒலித்தகடு (ஆடியோ டிவிடியை) ஏப்ரல்– 1 அன்று வெளியிட உள்ளேன்.

அதில் இந்தியா எப்படி உருவானது? சுதந்திரம் அடைந்தது உண்மையா? காந்தி, இந்திராகாந்தி, ராஜிவ் காந்தி ஆகியோர் கொல்லப்பட்டது ஏன்? இலங்கையில் நடப்பது என்ன? மலேசிய விமானம் என்ன ஆனது? பின்லேடன் தீவிரவாதியா? அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் இடிக்கப்பட்ட காரணம், இந்திய ரூபாய் மதிப்பு சரிவு, மன்மோகன் சிங்கின் மௌனம், மூன்றாம் உலகப்போர் போன்ற இவை மட்டுமல்லாமல் இன்னும் ஏராளமானவை ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இவற்றின் பின்னணியில் யார்யாரெல்லாம் இருக்கிறார்கள்? இன்னும் வருங்காலத்தில் என்னென்ன செய்யப்போகிறார்கள்? அவர்களின் நோக்கம் என்ன? அனைத்தையும் விரிவாக அந்த ஒலித்தகட்டில் வெளியிட உள்ளேன். அதில் குறிப்பிடப்போகும் விசயங்களின் சுருக்கமாக ஒரு முன்னோட்டத்தினைப் பார்க்கலாம் வரும் பாராளுமன்றத் தேர்தலில் நாம் வாக்களிக்கப் போகும். முன் பல இரகசியம் தெரியாத இரகசியங்களை இங்கு தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

**இந்தியாவிற்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை.** கி.பி. 1700 ஆம் ஆண்டு துவக்கத்தில் ஒரு 13 பேர் கொண்ட குழு ஒரு நாட்டில் ரகசிய வட்டமேஜை மாநாட்டை கூட்டியது. அந்த மாநாட்டின் முடிவில் தீர்மானிக்கப்பட்ட விசயங்களில் முக்கியமானது என்னவென்றால் உலகையே அந்த 13பேர் கொண்ட குழுவின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது. அதில் முதலாவது தீர்மானம் தான் இந்தியாவில் ஒவ்வொரு ராஜ்ஜியத்தையும், சிறுசிறு சமஸ்தானங்களைாகவும் ஆண்டு வந்த அரசர் களையும் அழித்து விட்டு மொத்தமாக ஒரே குடையின் கீழ் தங்கள் ஆட்சியை நிறுவுவது அதன்படியே அரசர்களைக் கொன்றும் மிஞ்சியவர்களை மிரட்டிப் பணிய வைத்தும் தங்களின் 13 பேர் கொண்ட குழுவிற்கே மொத்த இந்தியாவும் சொந்தம் என்று முடிவு கட்டினார்கள். அப்படி அவர்கள் முடிவெடுத்த தினம்தான் இந்தியாவின் சுதந்திர தினம். நாம் பெருமைப்பட்டு கொண்டிருப்பது போன்ற சுதந்திரம் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. நாம் அதைக் கொண்டாடவும் வேண்டியதில்லை. ஏனெனில் உண்மையில் நாம் வெட்கப்படவேண்டிய நாள், இந்தியா யாருக்கோ அடிமைப்பட்டு போன நாளை நாம் சுதந்திரதினம் என்று கொண்டாடும் பொழுது அந்த 13 பேர் எக்காளமிட்டு சிரித்துக் கொண்டிருக்கின்றனர். இதுதான் உண்மை.



யார் அந்த 13 பேர்? அவர்களின் பின்னணி என்ன? என்பதெல்லாம் பின்னர் விரிவாக அறியப்போகிறோம்.

மகாத்மா காந்தி, இந்திராகாந்தி சுடப்பட்டதும், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதும் யார் எதற்காக செய்தார்கள். காங்கிரஸ் கட்சியின் உண்மையான முதலாளி யார்? என்பன போன்ற இதுவரை யாருக்கும் தெரியாத திரைமறைவு இரகசியங்களை அறியப்போகிறோம்.

ஆம் ஆத்மி கட்சி திடீரென உதயமாகி இந்தியா முழுவதும் பிரபலமாகியதன் அரசியல் பின்னணி என்ன? யார் அதை இயக்குகிறார்கள்? யார் அதற்கு பணம் தருகிறார்கள்? பி.ஜே.பி கட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது? அதன் தற்போது நிலை என்ன? இந்தியாவில் அடுத்து நடக்கப்போவது என்ன? உலகம் என்னவெல்லாம் சந்திக்கப்போகிறது என அனைத்தும் இந்த 13 பேரின் கையில் தான். ஒவ்வொரு நாட்டிலும் அதன் அதிபரைத் தேர்ந்தெடுப்பது முதல் மாநிலத் தேர்தலில் முதல்வர்களை தேர்ந்தெடுப்பது என அனைத்தும் இவர்கள் தான். நாம் ஜனநாயக முறைப்படி வாக்களித்துத் தான் தலைவர்களைத் தேர்தெடுக் கிறோம். அப்படியிருக்க இவர்கள் எப்படி அதைத் தீர்மானிக்க முடியும்? என்று தானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதுதான் இல்லை. முன்பே யார் அடுத்த முதல்வர், பிரதமர் என்று முடிவுசெய்து விட்டு பின்னர் மக்கள் பார்வைக்கு நடத்தப்படும் நாடகமே இந்த தேர்தல்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றியும் அவர் தன் இயக்கத்தை வழிநடத்த யார் பணம் கொடுத்து உதவினார்கள் போன்றவை பற்றி வெளி உலகினருக்கு உண்மையான தகவல்கள் எதுவும் தெரியாது? அதைவிடவும் ஒரு முக்கியச் செய்தி என்னவென்றால் அவரைச் கொன்றது சிங்கள அரசு அல்ல. வேறொரு அமைப்பு. இன்னும் ஒரு தகவல் இருக்கிறது. அது இலங்கை அதிபர் ராஜபக்ஷே விரைவில் கொல்லப்படுவார். யார் செய்யபோகிறார்கள்? அதையும் அவர்கள் தீர்மானித்து வைத்திருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் பூட்டோ குடும்பத்தினரை ஒழித்துக்கட்டியதும் இவர்கள் தான். ஆனால் கொலை செய்தவர்களை மட்டுமே உலகத்தினருக்குத் தெரியும். பின்லேடன் ஒரு

சாதாரண ஆள் (டம்மி பீஸ்) அவன் தீவிரவாதி அல்ல. சதாம் உசேனை தூக்கில் போடுவதற்கு முன்னும் பின்னும் நடந்த உண்மைகள், மலேசியா, சிங்கப்பூர், வளைகுடா நாடுகள், துபாய், அபுதாபி, சார்ஜா, ஓமன் போன்ற பெரும்பாலான நாடுகளில் எல்லாம் நடப்பவை இவர்கள் தீர்மானிப்பதுதான். இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையில் நிகழும் பிரச்சினைகள் என்ன? அது உண்மையா? போன்ற எண்ணற்ற விசயங்களை மற்றவர்களுக்கு தெரியாத தெரிந்தாலும் பேசுவதற்குப் பயந்து நடுங்கும் உண்மைகளை ஏப்ரல் 1 அன்று ஒலித்தகட்டில் நாம் வெளியிடப் போகிறோம்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதை தொலைக்காட்சியில் பார்த்திருப்போம். ஆனால் அந்த சம்பவம் நடைபெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அதை நடத்த தீர்மானம் செய்யப்பட்டது. குறித்த நாளில் அந்த நாடகம் அரங்கேற்றப்பட்டு அதற்கு காரணம் பின்லேடன் எனும் டம்மிபீசின் பெயரைப் பயன்படுத்தியதும் அவர்களே. இந்த நாடகத்தின் இயக்குநர் யார் என்று அறிந்து கொள்ளபோகிறோம்.

தமிழக அரசியல் கட்சிகள் என்ன செய்து கொண்டுள்ளன. அவற்றிற்கு பணம் எங்கிருந்து வருகிறது? விஜயகாந்த் கட்சிக்கு பணம் எப்படி வருகிறது? இந்து மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாம் மதம் என்று பல மதங்கள் இருக்கின்றனவே இந்த மதங்களின் பின்னணியில் இருப்பது என்ன தெரியுமா?

சமீபத்தில் மலேசியா விமானம் ஒன்று 239 பயணிகளுடன் புறப்பட்டு சென்றது. பின்னர் அது கடலில் விழுந்து விட்டது என்றும் விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவியும் தருவதாக செய்திகள் வெளியாகின்றன. இதுவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு நாடகமே. நாடகத்தின் பின்னணியில் உள்ளது என்ன என்று பார்க்க இருக்கிறோம்.

இதைவிடவும் மிக முக்கியமான தகவல் என்னவெனில் விரைவில் மூன்றாம் உலகப்போர் மூளப்போகிறது. இந்தப் போரினால் எந்தெந்த நாடுகள் பாதிக்கப்படபோகின்றன? என்னென்ன விளைவுகள் ஏற்படப்போகின்றன? இதை நடத்தப்போகிறவர்கள் யார்? அனைத்து அறிவிக்கப் போகிறோம்.

என்ன நீங்கள்? இந்தியப் பாராளுமன்றத் தேர்தலைப் பற்றிப் பேசிக் கொண்டே மலேசிய விமானம், மூன்றாம் உலகப்போர் என்று எதை எதையோ கூறுகிறீர்களே? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. ஆம், எல்லாவற்றிற்கும் ஒரே சம்பந்தம் தான் இருக்கிறது. அது என்ன என்று ஏப்ரல் 1 அன்று விரிவாக அறிந்து கொள்வோம்.

அது ஏன் ஏப்ரல் -1ல் வெளியிடப் போகிறீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கு மிகப்பெரிய காரணம் இருக்கிறது. ஏப்ரல் -1 ஐ உலக முட்டாள் தினமாக கொண்டாடுகிறோம். உலகம் முழுவதும் 750 கோடி வரை மக்கள் வசிப்பதாக கணக்கெடுப்பு கூறுகிறது. என்னைப் பொறுத்தவரை 750 கோடி முட்டாள் மக்கள் வசிக்கிறோம் என்று தான் கூறுவேன். 13 பேர் கொண்ட குழு 750 கோடி மக்களை எப்படி ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இணையதளம் மற்றும் பேஸ்புக் என அனைத்திலும் ஏப்ரல்-1ல் வெளியிட உள்ளேன். அந்த ஒலிப்பதிவினை பெற்றுக் கொள்ளலாம். அதைப் பார்த்துப் புரிந்துகொண்டால் நம்மை யாரும் ஏமாற்ற முடியாது. அதன் பின்னர் யாருக்கு வாக்களிக்கலாம் அல்லது வேண்டாம் என்பதை முடிவு செய்யுங்கள். உலக முட்டாள்கள் தினத்திலிருந்து ஒரு அறிவுப்பூர்வமான உண்மையைத் தெரிந்துகொண்டு ஆக்கப்பூர்வமான ஒரு பயணத்தைத் தொடர்வோம்.

வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் !!



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

# அமைதியும் ஆரோக்கியமும்

(மாத இதழ்)

நெ.69, N.S.K. வீதி, செல்வபுரம், கோயம்புத்தூர் – 641 026, தமிழ்நாடு, இந்தியா.

## சந்தா விண்ணப்பப் படிவம்

(முழு முகவரியை கதவு எண், பின்கோடுடன் தெளிவாக எழுதவும்)

பெயர் : ..........

பிறந்த தேதி : .......... வயது : ..........

தொழில் : .......... இனம் : ஆண் ☐ பெண் ☐

தொலைபேசி: .......... கைபேசி : ..........

இ–மெயில் : ..........

முகவரி : ..........

.......... பின்கோடு ☐☐☐☐☐☐

**வருட சந்தா தொகை : தமிழ்நாடு ரூ.350/– மட்டுமே / பிற மாநிலங்களுக்கு ரூ.400/–**

**பணம் செலுத்தும் முறை**

காசோலை ☐ கா. எண் ..........

வரைவோலை ☐ வ. எண் ..........

மணி ஆர்டர் ☐ ரசீது எண் ..........

இணையதள பண பரிமாற்றம் ☐ இ.ப.எண் ..........

பணம் ☐ நேரடியாக ☐ வங்கி ..........

(வங்கியில் பணம் செலுத்தியிருந்தால் நகல் கொடுக்கவும் (அ) Scan செய்து E-mail மூலமாக அனுப்பவும்)

பணம் செலுத்திய நாள் ☐

செலுத்திய தொகை ☐

சந்தாதாரர் கையொப்பம் ..........

வெளிநாட்டில் உள்ள அன்பர்கள் சந்தா தொகை ரூபாய் 350/– ஐ செலுத்தி மாதா மாதம் E-mail மூலம் இதழை பெற்றுக்கொள்ளலாம்

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

1. பதிவு எண் : .......... 3. புதுப்பித்தல் தேதி : ..........

2. பதிவு தேதி : .......... 4. வருட சந்தா தொகை : ..........

அலுவலர் கையொப்பம் ..........

Photo

கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தவும்

பெயர் : **கிரி ஜயா பப்ளிகேஷன்ஸ்**, கணக்கு எண் : 034205500326

வங்கி : ICICI, கிளை : R.S. புரம், கோயம்புத்தூர். IFSC Code : ICIC0000342



www.amaidhiyumaarokiyamum.com + 91 - 8883805456 amaidhiyumaarokiyamum@gmail.com

சந்தாதாரர்கள் கவனத்திற்கு

# அனைவருக்கும் வணக்கம் !

1. அமைதியும் ஆரோக்கியமும் மாத இதழ் உங்கள் வீடு தேடி வர விண்ணப்பத்தை முழுவதும் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.
2. வருட சந்தா செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்தபின் தொடர்ந்து 12 மாதங்கள் இந்த இதழ் உங்கள் வீடு தேடி வரும்.
3. இதழ் தொடர்ந்து உங்களுக்கு கிடைப்பதில் தாமதம் அல்லது கிடைக்கவில்லை எனில் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.
4. உங்கள் வீடு, அலுவலக முகவரி, தொலைபேசி எண்கள் மாற்றத்தின்போது எங்களுக்கு தெரியப்படுத்தினால் மாற்றப்பட்ட முகவரிக்கு தொடர்ந்து இதழ் அனுப்பப்படும்.
5. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இந்த இதழ் குறித்து தெரிவியுங்கள். அவர்களும் சந்தாதாரராய் இணைய உதவுங்கள்.
6.. சந்தா புதுப்பிக்கப்படும் காலவரையறையின்போது உங்களுடைய சந்தா எண், தேதி ஆகியவற்றை தவறாமல் குறிப்பிட்டு புதுப்பித்துக் கொள்ளவும்.

மாத இதழ்

**மேலும் விபரங்களுக்கு**

**அமைதியும் ஆரோக்கியமும்**

நெ.69, NSK வீதி, செல்வபுரம், கோயம்புத்தூர் – 641 026.
தமிழ்நாடு, இந்தியா. போன் : + 91 88838 05456

E-mail : amaidhiyumaarokiyamum@gmail.com Website : www.amaidhiyumaarokiyamum.com

## மேலும் உங்கள் கவனத்திற்கு

அமைதியும் ஆரோக்கியமும் மாத இதழுக்கு எங்களுடன் கைகோர்த்த அனைவரும் வாழ்க வளமுடன்! மாத இதழுக்கு சந்தா செலுத்தி ரசீது பெறாத அன்பர்களுக்கு இந்த மாத இதழுடன் ரசீது இணைக்கப்பட்டுள்ளது. இதனை பெற்றுக்கொள்ளவும். மேலும் மாத இதழ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்காத அன்பர்கள் இந்த மாத இதழ் இறுதி பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை முழுவதும் பூர்த்தி செய்து எங்கள் முகவரிக்கு கொரியர் மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லது பூர்த்தி செய்த விண்ணப்பத்தை Scan செய்து E-mail மூலமாக அனுப்பி வைக்கலாம்.

இப்படிக்கு,

**நன்றி.**

Owned Published and Printed by E. Ravi Published from 5A/2, Bharathi Street, Thirupathi Nagar Extn., Kolathur, Chennai - 99 and Printed at Sri Aathi Lakshmi Graphics, 14/33 Sivan Koil Cross Street, Kodambakkam, Chennai - 24.

## அனாடமிக் செவிவழி தொடுசிகிச்சை நிறுவனர்

# ஹீலர் பாஸ்கர் அவர்களின் நிகழ்ச்சியின்போது...



07.03.2014 அன்று கரூர் குமாரசாமி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்கள் 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



09.03.2014 அன்று சென்னை மதுரவாயலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



22.03.2014 அன்று பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்கள் 550க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சியில் கன்னட மொழியில் அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை நூலை ஹீலர் பாஸ்கர் வெளியிட்டார்.

## அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை ஒருநாள் பயிற்சி நடைபெறும் இடங்கள்

| | | |
|---|---|---|
| 07.04.2014 | சிதம்பரம் | +91 97903 61768 |
| 13.04.2014 | திருச்சி | +91 97903 61768 |
| 18.04.2014 | சென்னை | +91 95000 90093, 98405 71099 |
| 26.04.2014 | திருவண்ணாமலை | +91 94868 43163 |
| 27.04.2014 | கள்ளக்குறிச்சி | +91 94433 06988 |
| 01.05.2014 | நாகர்கோவில் | +91 94431 52983, 94426 54839 |
| 11.05.2014 | திருநெல்வேலி | +91 9715157505 |
| 25.05.2014 | ராமேஸ்வரம் | +91 90438 85320 |
| 15.08.2014 | ஆற்காடு | +91 98943 15575 |

## அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை மூன்று நாட்கள் பயிற்சி நடைபெறும் நாட்கள்

| | | |
|---|---|---|
| 02.To 04.05.2014 | திண்டுக்கல் | (+91) 88706 66966 |
| 06.To 08.06.2014 | மலேசியா | 012 6646107, +60126041347 |
| 13.To 15.06.2014 | மலேசியா | 012 5786110, +60165072191 |
| 20.To 22.06.2014 | சிங்கப்பூர் | +65 81189802, +65 82669257 |

## அனாடமிக் செவிவழி தொடு சிகிச்சை ஐந்து நாட்கள் பயிற்சி நடைபெறும் நாட்கள்

| | | |
|---|---|---|
| 18.To 22.05.2014 | திண்டுக்கல் | (+91) 88706 66966 |

## மூன்று நாட்கள் நியூரோதெரபி பயிற்சி

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 18 முதல் ஏப்ரல் 20 வரை | பயிற்சி அளிப்பவர் ஜானி கண்ணன் | முன்பதிவுக்கு +91 88833 32707 |

## நியூரோதெரபி சிகிச்சை

| | | |
|---|---|---|
| தினந்தோறும் (முன்பதிவு அவசியம்) | திண்டுக்கல் | +91 88833 32707 |

